1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 30-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஆவணிமாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை— பிரதிசதம் 10

## உலகசமாதானத்தின் ஊற்று

இன்றைய நவநாகரீகஉலகில் எப்பக்கம்நோக்கினாலும், சினிமாக்காட்சிகளும், சிங்காரநடனங்களும், ஆடல்பாடல்களும். ஆரவாரங்களும், கூட்டங்களும், கொண்டாட்டங்களும், குழப்பங்களும், கூக்குரல்களும் தலைவிரித்தாடுவதைக் காணலாம். ஒருபக்கத்தில் மக்களிடையே எவர்கழுத்தை நசுக்குவோம்? எவரது சமாதானத்திற்கு உலைவைப்போம் என்பனபோன்ற சதிகளும், என்னத்தை உண்போம்? எதைக்கட்டுவோம்? எதைப்பூட்டுவோம்? என்ற சிந்தனைகளும் தோன்றிமறைகின்றன. மறுபக்கத்திலே மருதமடுத் திருப்பதியின் மாட்சியும், தோலகட்டி செபமாலைத்தாசர் ஆச்சிரமம், பண்டத்தரிப்புப் பாத்திமாகிரிபோன்றவற்றின் பரவசகாட்சியும், பக்தர்களின் மனக்கண்முன்பாகப் பிரதிபிம்பித்துக் கொண்டிருக்கின்றன.

ஊர்வாயைக்கட்ட யாரால்முடியும்? எலும்பில்லாதநாக்கு எப்பக்கமும் சுழலுந்தானே. அதனால் நாம்கண்டதையும் கேட்டதையும் வாயில்வந்தபடியே கட்டுப்பாடில்லாது உழறித்தள்ளி விடுகிறோம். எல்லையில்லாத நமதுபிதற்றல் ஓர் குடும்பத்தின் சமாதானத்துக்கு உலைவைக்கும் பேச்சாகஇருந்ததா? என்று சற்றேசிந்தித்துப் பார்க்கவேண்டியது கிறீஸ்தவதர்மமுடையமக்களின் கடனாகும். ஓர் ஏழைக் குடும்பத்தைப்பற்றி நாம்பேசும்சிறுநறிப்புப்போன்றதிண்ணைப்பேச்சு சிறிதுநேரத்துள் பெரியதூண்போல் ஆக்கப்பட்டு, நாம் பேச்சில் கருதியவர்கள்மட்டிலே வர்ணித்துச் சொல்லப்படுவதை நாம் அனுபவத்தில் காண்கிறோம். நாம் மாய்கைபோன்ற உலகில் வாழ்கிறோம், மனுஷீகவாழ்வில் வாழ்கிறோம், மனுஷருடன் மனுஷராக நடமாடுகிறோம், அவர்களுடன் சிநேகம் கொண்டாடுகிறோம், உள்ளக்கிடக்கையைச் சொல்லுகிறோம் என்றஉண்மைகளை மறந்துவிடலாகாது. வாயடக்கம்வேண்டும். அசுத்தமானநீர் எவ்வாறு வடிகட்டப்பட்டுப் பாவனைக்கு எடுக்கப்படுகிறதோ அதுபோல நாமும் பேசும்பொழுது ஒருவரைப்பற்றி அறிந்தவற்றை வடிகட்டி நன்மையானவற்றை எடுத்துச்சொல்லித் தீமையானவற்றைத் தவிர்த்துவிடப் பிரயாசப்படவேண்டும். இதுதான் கிறீஸ்தவதர்மமும், சகோதரத்துவமுமாகும்.

நாமெல்லாம் உலகசமாதானத்தை விரும்புகிறோம்; இந்நல்லநோக்கம் பூர்த்திபெற மன்றாடுகிறோம். ஆனால், எல்லாத்துக்கும் முதன்மையாக மக்களின்குடும்பங்களிடையே சமாதானத்தை வளர்க்கவிரும்பவேண்டும். அதற்கான முயற்சி செய்யவேண்டும். குடும்பஐக்கியம்என்னும் கூட்டுப்பந்தனம் குலையாதிருக்க எல்லவருமே கூட்டுமுயற்சிசெய்ய முன்வரவேண்டும். இதற்கு நாம் முதல் கவனிக்கவேண்டியது வாய்அடக்கம். ஒருவரைப்பற்றி மற்றொருவர் பேசுவதிலே குறையைத் தவிர்த்து நிறைவை எடுத்துச் சொல்ல முன்வரவேண்டும். குடும்பசமாதானத்திற்கு உலைவைக்கும் "தமனகன்" "கரடகன்" எங்குமே இருக்கிறார்கள்

ஏ. பி. தம்பிராசா

என்பதை எவருமே மறந்துவிடலாகாது. அவர்களுடன் பேசும்பொழுது சமயோசிதமாய்க் குறைகளைப்பேசாது நிறைவுகளையே பேசவேண்டும். ஓரளவிற்குச் சகிப்புத்தன்மையை எல்லவரும் பயின்றுகொள்ளவேண்டும். எங்கள்குடும்பங்களின் பொதுமுன்னேற்றத்திற்காகத் தவறுகளை எடுத்துப்பாராட்டாது சகிப்புத்தன்மையுடன் வாழவேண்டும். "கொண்டோடிக"ளால்தான் நாட்டின் நலஉரிமைகெடுகிறதெனச் சர்வசாதாரணமாய்க் கூறப்படுவதில் உண்மை பொதிந்துள்ளதென்பதை நாம் மறந்துவிடலாகாது. குடும்பங்களில் ஒவ்வொருவராவது சமாதானதூதர்கள்போல் இருப்பார்கள். அவர்கள்கூறும் நல்லாலோசனைகளைக் கேட்டு நடக்கப் பயின்றுகொள்ளவேண்டும். சேர்ந்துவாழ்வதே சிறந்தகொள்கையென்பதைக் கவனித்துக் குடும்பங்களின் சேமாபிவிருத்திக்காகக் குடும்பங்களிலுள்ள எல்லோருமே ஒத்துழைக்கவேண்டும். இவ்விதம் குடும்பங்களிடையே சமாதானத் [illegible] பெருக்க [illegible] பித்து முன்வருவோமாயின் நாடுமுழுவதிலும் சமாதானம் நிலவும். அதனால் ஈற்றில் உலக [illegible]த்தின் ஊற்றுத் திறக் [illegible] என்றறிவோமாக!

## கம்யூனிஸமும் கிறீஸ்தவமும்

(முன் தொடர்ச்சி)

சமாதானத்திற்காகவும், மனிதர்களின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகவும் மக்களெல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று திருச்சபையைவிட அதிகமாக விரும்புபவர் யார் உளர்? சமாதானம், சுதந்திரம் என்றஇரண்டுவார்த்தைகளுமே கிறீஸ்தவவார்த்தைகள். ஆனால், குழப்பம்பண்ணுவதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருப்பவர்களும் பலாத்காரத்தைக் கடவுள்போல் கும்பிடுகிறவர்களுமே அவ்விரண்டுவார்த்தைகளையும் சதா உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர்.

உண்மையானசமாதானம் எல்லாஉரிமைகளையும் காத்து வருகிறது. எல்லாக்கடமைகளையும் நிறைவேற்றிவருகிறது. உண்மையானசுதந்திரம் ஒவ்வொருவனுக்கும் கருத்துச்சுதந்திரத்தையும், வாழ்க்கைச்சுதந்திரத்தையும் அளிக்கிறது.

"கம்யூனிஸம்என்பது பாட்டாளிமக்களின் சர்வாதிகாரம். கம்யூனிஸம்என்பது இரண்டு வர்க்கங்களுக்கும், இரண்டுஉலகங்களுக்கும், உலகசரித்திரத்தின் இரண்டு யுகங்களுக்குமிடையே கடும்போர், இரத்தக்களரிப்போர், ஈவிரக்கமில்லாத போர், மரண மட்டும்போர்" என்று லெனின்கூறியுள்ளார். அப்படியிருக்க அந்தக்கம்யூனிஸத்தில் மனிதசுதந்திரம் எப்படியிருக்கமுடிம்? காள் மாக்ஸின் நண்பரும், அவருடைய கொள்கைகளைப் பரப்புவதில் முக்கியபங்கு எடுத்துக்கொண்டவருமான எங்கெல்ஸ் என்ற ஜேர்மன் நூலாசிரியர், "சுதந்திரஜனநாயக அரசாங்கம் என்பதெல்லாம் மூடத்தனமான பிதற்றலாகும். பாட்டாளி ஆட்சிக்கு ஒருஅரசாங்கம் தேவைதான். ஆனல், சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அல்ல, தனது விரோதிகளை அழிப்பதற்கே அரசாங்கம் தேவையாயிருக்கிறது" என்று எழுதியிருப்பதை லெனின் எடுத்துக் காட்டியுள்ளார்.

அதிகாரவர்க்கம் தன்விஷ்டம்போல் தனிஆட்களையும், அவர்களின் மனச்சாட்சியையும் ஆட்டிவைக்கிறது. அதிகாரவர்க்கம் எப்படிநினைக்கிறதோ அதையேகுடிகளும் நினைக்கவேண்டும். "சட்டசபையில் அங்கத்தவராகவுள்ள ஒவ்வொருகம்யூனிஸ்தனும் தனதுகட்சிக்காகத் தான் புரட்சிபண்ணுவது தனது கடமையென்பதையும், கட்சியின்திட்டங்களை எதிரிகளிடையே நிறைவேற்றுவதற்காகவே தான்சட்டசபைக்குஅனுப்பப்பட்டிருக்கிறானென்பதையும் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்" என்று லெனின்கூறியுள்ளார்.

எனவே, கம்யூனிஸ்த திட்டம் கிறீஸ்தவதிட்டத்திற்கு நேர்எதிரிடையானது. கிறிஸ்தவ திட்டம் சமாதானத்தின் திட்டம். அரசாங்கத்தின்சக்தியைச் சமூகத்தினுடையவும், தனிஆட்களுடையவும் சேவைக்காகப் பயன்படுத்தும்திட்டம். தார்மிகஇலட்சியங்களைக் கனப்படுத்தும்திட்டம். கடவுள் மனுக்குலத்திற்குக் குறித்துள்ளநோக்கங்கள் நிறைவேறுவதற்காக எல்லாமனிதர்களுடையவும் சுயேச்சையான ஒத்துழைப்பைக் கோரும் திட்டம்.

தார்பு-லூர்து மேற்றிராணியாராகிய மகாவந். தெயாஸ் ஆண்டவரவர்கள் விடுத்த நிருபத்தின் சாரம்.

### கம்யூனிஸம் சமாதானவிரோதி

"கம்யூனிஸம்என்றால் சமாதானம்" என்று ஓயாமல் கம்யூனிஸ்தர்கள் சொல்லிக்கொண்டேயிருக்கின்றனர். சமாதானம் என்ற இந்தவார்த்தையோவெனில், கிறீஸ்தவர்களாகிய நமக்குப் பிதிரார்ச்சிதமாகவந்துள்ள வார்த்தை. கிறீஸ்துவின்வாயிலிருந்து புறப்பட்டவார்த்தை. கிறீஸ்தவர்களின் பரஸ்பரவாழ்த்துக்கு ஏற்பட்டவார்த்தை. அவர்களுடைய கடமையைஉணரச்செய்யும் வார்த்தை. கம்யூனிஸம் இந்தவார்த்தையையே தன்னுடையஇலட்சியமாகக் கொண்டிருப்பதாக நடிக்கிறது. ஆனல், இந்தவார்த்தையைச் சதாஉச்சரித்துக்கொண்டே அதற்கு விரோதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறது.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேயானாலும் தாய்

"என்ன பேசாமலிருக்கிறாய்? புஷ்பத்துக்கு எப்பொழுது கலியாணஞ் செய்து வைக்கப்போகிறாய்? நான் கண்ணைமூடினபிறகுதானா? என்கண்ணுள்ளபோதே அவள் தாயும்பிள்ளையுமாய் இருப்பதைக் கண்டுவிட்டுப் போகலாமென்றால் நீ நாளைக்கடத்திக் கொண்டுவருகிறாயே" என்றாள் அறுபதுவயசுள்ள அன்னம்மாள்.

"அம்மா, நமக்குஇருக்கிறது ஒரு பெண். அவளை நல்லஇடம்பார்த்துக் கட்டிக்கொடுக்க வேண்டாமா? அவசரப்பட்டுப் பாழுங்கிணற்றிலே அவளைப்பிடித்துத் தள்ளச்சொல்லுகிறீர்களா? நமக்குப்பின் அவள்வயிற்றுப் பாட்டுக்குக் குறைவில்லாது சுகமாக வாழக்கூடிய இடமாகப்பார்த்துக் கொடுக்கவேண்டாமா? இப்போது என்ன குடிகெட்டுப்போகிறது? இப்பொழுதுதானே அவளுக்குப் பதினாறு வயதாகிறது" என்றார் அவள்மகன் ஆனந்தர்.

"நான்சொல்லுகிறசொல்லை இந்த வீட்டில் யார்கேட்கிறார்கள்? எங்கள் காலத்தில் பெரியவர்களின்சொல்லுத்தான் எங்களுக்கு வேதமாயிருந்தது. அவர்கள்சொல்லைக்கேட்டு நடப்பதுதான் எங்கள்வழக்கம். இப்பொழுது எல்லாம் தலைகீழாகிவிட்டது. என் சொல் உன்காதில்ஏறுமா?" என்று கடுமையாகப்பேசினாள் அவர்தாய்.

சமையல்அறையிலிருந்த ஆனந்தருமனைவியின்காதில்இவ்வார்த்தைகள் விழுந்தன. உடனே அவள் ஓடிவந்து, "என்னசொன்னீர்கள்! இந்தக்கிழவயதிலே உண்டானதைத்தின்றுவிட்டுச் சும்மாகிடக்கிறதுதானே; எல்லாம் காலம்வரும்போது நடக்குந்தானே; புஷ்பத்தின் கலியாணத்தைப்பற்றி எங்களுக்கில்லாதஅக்கறை உங்களுக்கு வந்துவிட்டதா" என்றுகேட்டாள்.

வெறுவாயைமெல்லுகிற அம்மையாருக்கு ஒருவாய்அவல் அகப்பட்டால் சும்மாவிடுவாளா? "அப்பா ஆனந்தா! நான்கேட்கவேண்டியதைக் கேட்டாயிற்று; எல்லாம் அவள்பேச்சைக் கேட்டு நீநடப்பதினால்தான் அவள் என்னைமதியாது எதிர்த்துப்பேசுகிறாள்; நான் எங்கேயாவது போய்த்தொலைகிறேன்" என்றாள் அன்னம்மாள்.

"அம்மா, புஷ்பத்தின் கலியாணத்தைப்பற்றி நாங்கள் சிந்திக்காமலா இருக்கிறோம்? கலியாணம் என்பது இலேசானகாரியமா? ஆயிரங்காலத்துப் பயிரல்லவா? தீரயோசித்துச் செய்யவேண்டாமா? பதறுதகாரியம் சிதறுது அல்லவா? எப்படியாவது இந்தவருடத்திற்குள் புஷ்பத்தின் கலியாணத்தை முடித்துவிடுகிறோம்" என்று ஆனந்தர் தன்தாயைச் சமாதானப்படுத்தினார்.

அன்றுமுதல்அவர் தனது அருந்தவப்புதல்விக்கு மாப்பிள்ளைதேடப் புறப்பட்டார். சரியானவரன் கிடைக்கவில்லை. கடைசியாக ஒருவாலிபனைத் தெரிந்தெடுத்தார். அவன் பெயர் அருமைநாதன். அவன் இராணுவத்தில் ஓர்உத்தியோகஸ்தன்; மாதம் நூற்றுக்கணக்கிலே சம்பளம்பெறுகிறவன். ஒருமாதவிடுமுறையிலே தன் சொந்தஊருக்கு வந்திருந்தான். அவனது அன்புததும்பும் முகத்தையும், அருங்குணங்களையும்கவனித்த ஆனந்தர் புஷ்பத்தை அவனுக்குத் திருமணஞ் செய்துவைக்கத் தீர்மானித்தார். அந்த மாதத்திலே புஷ்பத்தின்கலியாணம் நடந்தேறியது. அவளும் புக்ககம்வந்தாள். வானில்ஒளிரும் மதியைப் போல்விளங்கினாள். அவளது அழகும் குணமும் அருமைநாதனின்உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. தம்பதிகள்இருவரும் ஆனந்தமாக வாழ்ந்தார்கள்.

* * *

அருமைநாதன் இராணுவத்திற்குத் திரும்பிச்செல்லும் நாள்நெருங்கியது. நாள்நெருங்கநெருங்கப் புஷ்பத்தின் மனம் வெடித்துவிடுவதுபோல் இருந்தது. என்றாலும்அவள் படித்தபெண். கணவனின்கடமையையும், பொறுப்பையும்பற்றி நன்குஅறிந்தவள். தான் கலங்கிக்கொண்டிருந்தால் கணவன் மனம் புண்ணாகும்என்பதை உணர்ந்தாள். ஆகவே, தன்மனதை அடக்கிக்கொண்டு முகத்தில் புன்முறுவல் மலரக் கணவனோடு அளவளாவிவந்தாள்.

அருமைநாதன் புறப்படும்தினம் வந்தது. புஷ்பம்அவனுடன் றெயில்வேஸ்றேஷன்மட்டுஞ்சென்று இனிமையாகப்பேசி, "நாதா! தாங்கள் எப்பொழுது திரும்பிவருவீர்கள்?" என்று கிள்ளைபோல்கேட்டாள். தன்பத்தினி இக்கேள்வியைக்கேட்டதும் அவனது வன்னமுகம் வாடியது. "அன்பே! வருந்தற்க. நான்விரைவில் மீண்டும் வருவேன். ஓர்ஆண்டுள் யான்உன்னை வந்தடைவேன்; நீ அதுவரை எனது அன்னையும், தமக்கையும் மனம்கோகாவண்ணம் நடந்துகொள்" என்று அன்புடன்பகர்ந்தான். புஷ்பம் தனது மனக்கவலையை மறைத்து முகத்தில் புன்னகைதவழக் கணவனைவழியனுப்பி வைத்தாள்.

அருமைநாதன் தனதுபத்தாவது வயதில் தந்தையைஇழந்தான். அவனது தமக்கையின்கணவன் இறந்துவிட்டபடியால் அவள் தனக்குரியதையெல்லாம் சுருட்டிக்கொண்டு தாய்வீடு வந்துசேர்ந்தாள். அப்போது அருமைநாதன் பத்தாவதுவகுப்புவரை படித்துத் தொழில்துறை ஏதும் தேடி அலைந்துதிரிந்தான். ஒன்றும்கிடைக்க

— S. M. P. —

வில்லை. கடைசியாக இராணுவத்தில் சேர்ந்தான்.

மாதங்கள்ஆறு மறைந்தன. புஷ்பம் தன்மாமியாருக்கும், மச்சாளுக்கும் பணிவாகநடந்துவந்தாள். மாமியார் எப்பொழுதும் நாய்போன்று 'வள்வள்' என்று விழுவாள். மச்சாளோ நரிபோல் நடந்துகொள்வாள். அவர்கள் இருவருஞ்சேர்ந்து புஷ்பத்தை ஆட்டிவைத்தனர். அருமைநாதன் மாதம் மாதம் தன்தாயாருக்கு நூறுரூபா அனுப்பிவந்தான். அவள் அதையெல்லாம் வட்டிக்குக்கொடுத்துவிட்டுத் தங்கள்வீட்டுச்செலவுக்காகச் சாப்பாட்டுவிடுதி ஒன்று ஏற்படுத்தினாள். விடுதிச் சமையல்காரியும், சாப்பாடு பரிமாறுகிறவளும் புஷ்பந்தான். என்ன செய்வாள் அவள். கணவன்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து மாமி, மச்சாள் சொன்னபடி நடந்துவந்தாள்.

புஷ்பம் தனது அழகியகூந்தலை வாசனைதடவிமுடித்து, அதில்மலரைச் சூட்டி, நெற்றிக்குத் திலகமிட்டால், இருவருக்கும் கோபம்வந்துவிடும். "இந்தச் சாணைகெட்ட மூழிக்குப் பூவேறு, பொட்டுவேறு; நேரத்துக்கொருபுடவை தரித்துக்குலுக்கிமினுக்கிக்கொண்டு இருக்கிறாளே; புருஷன் இல்லாதகாலத்தில் இவளுக்கு இந்த அலங்காரம் எதற்கு?" என்று பல்லவிபாடுவாள் மாமி. "எல்லாம் நீங்கள் கொடுக்கிற இளக்காரம்அம்மா; அவளுடைய நகைநட்டுகளையும் பட்டுப் புடவைகளையும் வாங்கிவைத்துக்கொள்ளுங்கள்; நேரத்துக்குநேரம் பட்டி மாடுபோல் நன்றாய்த்தின்றுகொண்டு குதிர்மாதிரி இருக்கிறாளே" என்று பக்கப்பாட்டுப்பாடுவாள் மச்சாள். ஆனால், புஷ்பமோ பொறுமைஎன்னும் குடையைத் தனது ஆயுதமாகக் கொண்டு காலத்தைக்கழித்தாள்.

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

# சுதேச வர்த்தமானம்

## ஆசனக்கோயில் திருநாள்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோயில் திருநாளாகிய தேவதாயாரின் மோட்சாரோபணத்திருநாள் நிகழும் ஆவணிமாதம் 15-ந்தேதி வெள்ளிக்கிழமை வழமைபோலக் கொண்டாடப்படும். இதற்கு ஆயத்தமான திருவிழாக்கள் இம்மாதம் 1-ந் திகதி ஆரம்பமாகிப் பத்திச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

## மருதமடுயாத்திரை வசதிகள்

மருதமடுத்திருப்பதியில் கொண்டாடப்படும் ஆவணித்திருநாளுக்குச் சமுகமளிக்கும் யாத்திரிகர்களின் வசதியைக்கோரி மடுறோட்டுக்கும் மடுப்பதிக்குமிடையே இம்மாதம் 8-ந்திகதிமுதல் 16-ந்திகதி முடிகிறவரையில் யாத்திரிகர்களையும், சாமான்களையும் ஏற்றியிறக்குவதற்கான றெயில்–றோட் சேவை ஒன்று நடத்தப்படவிருக்கிறது. இரண்டுக்குமான டிக்கெற்றுகளை அவரவர் றெயின்வண்டியேறும் ஸ்றேஷன்களில்பெற்றுக்கொள்ளலாம். திரும்புதற்கான டிக்கெற்றுகளை மடுப்பதிக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். மடுறோட்டிலிருந்து மடுப்பதிக்கு றோட் பிரயாணசலார் வளர்ந்தவர்களுக்கு 75 சதம். 3 முதல் 12 வயசுடைய சிறுவர்களுக்கு 40 சதம்.

## புதிய ஜே. பி., யு. எம்.

சாவகச்சேரிப் பட்டினசங்க தலைவராக இருந்தவரும், பிரக்கிராசியாருமான திரு. எஸ். கே. திரவியநாயகம் அவர்கள் பருத்தித்துறை–சாவகச்சேரி நீதிப்பரிபாலனபகுதிக்கு ஜே. பி. எனப்படும் சமாதானநீதிபதியாகவும், யு. எம். எனப்படும் உத்தியோகப்பற்றில்லாத நீதிபதியாகவும் அரசினராலேநியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார். அதனால் அவரைக் கௌரவிக்குமுகமாகச் சாவகச்சேரியிலே சென்ற 28-ந் திகதி ஓர் வரவேற்புஉபசாரம் பரிமளிப்பாக நடைபெறலாயிற்று.

## எஞ்ஜினியர்களின் விஜயம்

இலங்கை எஞ்ஜினியர்களின் சங்கத்தைச்சேர்ந்த 200 எஞ்ஜினியர்கள் சென்ற சனிக்கிழமைகாலை விசேஷ றெயின்வண்டி ஒன்றிலே காங்கேசன் துறைவந்துசேர்ந்து யாழ்ப்பாணக்குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பெரிய கைத்தொழில், கமத்தொழிற் திட்டங்களைப்பார்வையிட்டுத் திரும்பியிருக்கின்றனர். இவர்கள்முந்தக் காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையை மூன்றுமணிநேரம் பார்வையிட்டபின் அங்கிருந்து ஒன்றரைமைல் தூரத்திலுள்ள மின்சாரநிலையத்தையும், கீரிமலை நீரூற்றுகளையும் பார்த்து, அதன்மேல் சாயந்தரம்வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பரவைக்கடற்திட்டத்தை நேரில்கண்டுகொள்ளுமாறு தொண்டைமானாற்றுக்குச் சென்றனர். இத்திட்டத்தின்படி அங்கே உப்புநீர்ப் பரவைக்கடலை நல்லதண்ணீர்ப் பரவைக்கடலாக மாற்றுதற்கென ஓர் அணைக்கட்டு அமைக்கப்படுகிறது. வவுனியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கருங்கற்கள்கொண்டு அமைக்கப்படும் இந்தஅணைக்கட்டு அநேகமாகப்பூர்த்தியடைந்துவிட்டது. இதனால் அங்கு 15,000 ஏக்கர் தரவைநிலத்தைக் கமச்செய்கைக்குள்ளாக்கலாம். இதில்8,000 ஏக்கர்நிலம் நெற்செய்கைக்கென ஒதுக்கப்படவிருக்கின்றது. இத்திட்டம் வருகிற ஐப்பசிமுதல் வேலைசெய்யத்தொடங்கும். பின்னர் அவர்கள் தொண்டைமானாற்றிலிருந்து புத்தூரிலுள்ள நிலாவரைக் கிணற்றைச் சென்றுபார்த்தனர். தற்போது இக்கிணற்றிலிருந்து கோப்பாய்த்தொகுதியிலுள்ள 200 ஏக்கர் காணியில்நடக்கும் தோட்டப்பயிர்ச் செய்கைக்கு நீர்பாய்ச்சப்படுகிறது. அதன்மேல் அவர்கள் ஊரெழுவுக்குச் சென்று பொக்கணைக் கிணற்றிலிருந்து மணித்தியாலம் 5,200 கலன் தண்ணீர் இறைக்கும் காற்றாடி யந்திரத்தைப் பார்வையிட்டனர். அதுகொண்டு 80 ஏக்கர் காணியில்நடக்கும் தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தண்ணீர் இறைக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு அவர்கள் அன்று சாயந்தரம் அதேறெயின்வண்டி மூலம் கொழும்புக்குப் பயணமானார்கள்.

## குற்றிக்கொல்லப்பட்ட முதலாளி

ஸ்ரான்லி வீதியிலுள்ள ஓர் றொட்டிச்சாலையினதும், தேநீர்க்கடையினதும் சொந்தக்காரரான 35 வயசுடைய திரு. எச். ஜி. ஆரியதாசா அப்புஹாமி என்பவர் சென்ற 2-ந்திகதி கொலையுண்டாரெனச் சொல்லப்படுவதையிட்டு பி. டன்னிஎனும் ஒருவன் விளக்கமறியலில் வைக்கப்படுமாறு நீதிபதியால் உத்தரவிடப்பட்டிருக்கின்றான். இது நிகழ்ந்தபோது டன்னிஎன்பவன் காலஞ்சென்றவரின்கீழ் வேலைசெய்துவந்தான். முதலாளியைஇவன் துளையிடும்ஆயுதம் ஒன்றால் குற்றினானெனச் சொல்லப்படுகிறது.

## வருடம் இருபதினாயிரம் ஏக்கர்

அடுத்துவரும் எட்டுவருடங்களிலும் புதுக்காணியாக வருடந்தோறும் 20,000 ஏக்கர்வரையில் விஸ்தீரணமான தேசப்பரப்பைத் திருத்திப் பயிர்ச்செய்கைக்குள்ளாக்கும் பரீட்சார்த்தமான திட்டம்ஒன்றை நீர்ப்பாசனபகுதி செய்திருப்பதாக அதன் தலைவர் தெரிவிக்கின்றார். தற்போது இலங்கையில் ஏறக்குறைய 9,80,000 ஏக்கர் நெற்காணியில் வருடம்ஒன்றுக்கு 2,80,000 தொன் அரிசி உற்பத்திசெய்யப்படுகிறது; விளைவுவீதத்தைச் சனப்பெருக்கவீதத்துடன் சமாளிக்கிறதாயின் வருடந்தோறும் புதிதாகச் சுமார் 60,000 ஏக்கர் நெற்காணி வேளாண்மைக்குத் திறக்கப்படவேண்டியிருக்கிறது; இந்நாட்டில் இறக்குமதியாகும் அரிசியின் தொகையையும், அதன் பெறுமதியையும் ஆராய்ந்துபார்க்குமிடத்து, சென்ற 1951-ம் ஆண்டிலே 4,90,397 தொன் அரிசி இறக்குமதியாயிற்று; இதன்விலை 27 கோடியே 80 லட்சம் ரூபாவாகும்; வருடந்தோறும் இலங்கையின் சனத்தொகை இரண்டுலட்சம் பேர்வீதம் அதிகரித்து வருகின்றது; அதனால் ஒவ்வோர்வருடமும் 17,000 தொன்அரிசி மேலதிகமாகத் தேவைப்படுகிறது என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

## மன்னாரை இணைக்கும்தெருக்கள்

மன்னார்ப்பிரிவிலே மிக விசேஷப்பட்ட இருபுதிய தெருக்களை—அதாவது வடகடற்கரை, தென்கடற்கரைத் தெருக்கள் இரண்டையும் அமைக்கும் வேலையை மன்னார் நிர்வாக எஞ்சினியர் தீவிரமாகநடப்பித்துவருகின்றார். இருதெருக்களும் அடுத்த புதியஅரசிறை வருடத் தொடக்கத்திலே பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. வடகடற்கரைத் தெருவைஅமைக்க எத்தனையோ வருடங்களின்முன் திட்டமிடப்பட்டது. இது மன்னார்ப்பட்டினத்தை யாழ்ப்பாணப்பட்டணத்துடன் இணைப்பதாகும். இத்தெருவானது யாழ்ப்பாணத்துக்குள்ள தூரத்தை ஏறக்குறைய அரைவாசியாகக் குறைப்பதாகும். அத்துடன் நெல்வேளாண்மைக்குவாய்ப்பான பெருந்தேசப் பரப்பை அதற்குத் திறப்பதாகும். தென்கடற்கரைத்தெரு புத்தளம்வழியாகமன்னாரைக் கொழும்புடன் இணைப்பதாகும். இதுவும் பெருந்தேசப் பரப்பை நெல்வேளாண்மைக் குள்ளாக்கக்கூடியது. இந்தத்தெருவிலே காட்டின்மத்தியிலுள்ள சுமார் பத்துமைல் நீங்கலாக ஏனையபகுதி பூர்த்தியடைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகமாலை

## அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

ஆவணிமாதம் 15-ந் திகதி
ஆரம்பம்.

❊

ஆவணிமாதம் 23-ந் திகதி
மெழுகுவர்த்திச்
சுற்றுப்பிரகாரம்.

❊

ஆவணிமாதம் 24-ந் திகதி
காலை 7 மணிக்குத்
திருநாட்பூசை.
பின்னர் சுற்றுப்பிரகாரம்.

**Rev. Fr. J. A. Rajanayagam,** O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, Jaffna.

Sub-Post Office,
Nallur.

# காலையும் கதிரோனும்

(1) காலைக் காட்சி பார் பார் பார்!
கதிரோன் உதயம் பார் பார் பார்!
மேலைக் கடலில் வீழாமுன்
விரைந்து சென்றே பார் பார் பார்!

(2) ஓங்கும் இருளைக் கதிரொளியால்
உதறித் தள்ளி வருங்காலை
தூங்கும் பேர்க்குச் சுகமில்லை
சொன்னேன் வந்து பார் பார் பார்!

(3) தேரில் விரைந்து வாவென்றே
சேவற் கோழி சிறகடித்துப்
பாரில் அழைக்கும் பான்மையைப்போற்
பாங்காய்க் கூவும் பவனியைப் பார்!

(4) கங்குற் பொழுது முழுவதுமே
காவல் செய்த கடவுளுக்குச்
செங்கை கூப்பி மக்களெலாஞ்
சேவை செய்யும் திருவைப்பார்!

(5) செல்வக் குழந்தாய்! எழும்பென்றே
சேயைத் தட்டி உணவூட்டிக்
கல்விக் கழகம் உவந்தனுப்பும்
காதற் தாயின் கனிவைப் பார்!

(6) நாதன் வரவு பார்த்துவக்கும்
நல்லார் முகம்போற் தாமரையும்
தாது சிந்தி யவிழ்வதைப்பார்!
தண்டேன் நுகரும் வண்டினம் பார்!

(7) வானிற் சுடரை வைத்த பெரும்
வள்ளற் புகழை வாழ்த்துவபோல்
கானிற் புள்ளும் பண்ணினிய
கான மிசைக்கும் ஞானம்பார்!

(8) கண்ணின் இனிய கடமைசெயக்
காத்தே யிருந்த மக்களெலாம்
எண்ணி யுவந்தே செல்கின்ற
ஏருஞ் சீரும் எங்கும் பார்!

(9) ஒற்றை யாழித் தேரதுவாம்
ஓட்டி வருவோன் முடவனுமாம்
பச்சைக் குதிரை இழுப்பதுவாம்
பழய கதையொன் றுரைத்தேன்பார்!

(10) நீதிபரனை எதிர்நோக்கி
நீதியின் சூரியன் என்போம்பார்!
ஆதி பரனைக் கிழக்கில்உதி
ஆதித்த னென்று அழைப்போம் பார்!

(11) மக்கள் வாழ்நாள் அளந்துவரும்
மாயக் கருவி இதுவென்ற
தக்க பெரியோர் நல்வாக்கைத்
தலைமேற் கொண்டு வாழ்வாயே!

"ஞானி"

# தங்கயூபிலி கொண்டாடும் லீலிமலர்

(முன்தொடர்ச்சி)

சீக்கிரமாகஎல்லோரும் மரியாவின் பரிதாப நிலையை அறிந்தார்கள். அவள் உடலில் 14 படுகுழிக் குத்துவாள் காயங்களை அவர்கள் எண்ணினார்கள். மறுநாள் பிற்பகல் நாலு மணி பரியந்தம் மரியா உயிரோடு இருந்து அவள் இறப்பதற்கு உரிய காரணத்தை அவள் மூலமாக உலகம் முழுவதிற்கும் அறிவிக்கும் பொருட்டுக் கடவுள் சித்தமானார்.

எகிப்துதேசத்துப் பிரபுவான பூத்திப்பார் அரண்மனையில்பிதாப்பிதாவாகிய சூசையப்பர் இருக்கும்போது ஓர் கொடிய பாவக்கிரிகைக்கு அவரைப் பலவந்தப்படுத்தியதாகப் பழையஏற்பாட்டில் வாசிக்கிறோம். ஆனால், அந்தப் பரிசுத்த வாலிபர் சர்வேசுரனுடையகண்கள் தன் பேரிலிருக்கிற தென்பதை நினைவுகூர்ந்து அந்தச்சோதனையை வெற்றிகொண்டார். கெட்டவிஷயத்திற்குச் சம்மதிக்கும்படி பத்தியும்பரிசுத்ததனமுமுள்ள சூசானள்என்பவளைத் தூண்டி ஏவும்போது, அக்கன்னிகை சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் இருந்தாள்.

இதேபிரகாரம்தான் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் கற்பின் அணையா அமரதீபத்தைச் சுடர்விட ஏற்றிவைத்தாள் கற்பின்செல்வியாகியமரியா. சஞ்சோனிடத்தில் விளங்கின தேகபலம் கிறீஸ்தவர்களுடைய ஞானத்திடனுக்குச்சாயலாயிருக்கிறது. சர்வேசுரன் அவனுக்கு அபரிமிதமான பலத்தைக் கொடுத்தார். இதேவிதமான ஞானத்திடன் பன்னிருவயசு இன்னும்நிரம்பப்பெறாதபாலகி மரியாவிடம் விசேஷித்துவிளங்கியது.

மரியா ஏழரைமைல் தூரத்திலிருந்த நெற்றூனோ ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டாள். ஆஸ்பத்திரியின் ஞானவிசாரணைக்குரவர் மரியாவிடம் பாவசங்கீர்த்தனம் கேட்டார். பின்னர் இரண சிகிச்சை இரண்டுமணிநேரம் நடந்தது. தாங்கொணாத தனதுவேதனையின்போது "யேசுமரி"என்கிற நாமங்களை இடைவிடாது உச்சரித்தாள். தான் அனுபவிக்கும் கொடூரவேதனையை அருகிலிருந்த தனதுஅருமைத்தாயிடம் மறைக்கமுயன்றாள். அடிக்கடி தன் உதடுகளில் வைக்கப்பட்ட பாடுபட்டசுரூபத்தையும், தேவதாயின்படத்தையும் ஆவலுடன் முத்திசெய்தாள். பிறகு அவஸ்தைப் பூசுதலும், திவ்வியநன்மையும் மரியாவுக்கு வழங்கப்பட்டன. மரியா முதன் நன்மை பெற்றதுமுதல் அவஸ்தை நன்மை பெறுகிறவரையில் இடையிலே மூன்றுதரம் மாத்திரம் திவ்வியயேசுவைப் பெற்றாள்.

1902-ம் ஆண்டு ஆடிமாதம் 6-ம்திகதி பிற்பகல் 3-45 மணிக்குக் கொரிநால்டோவின் லீலிமலர் இவ்வுலகத்திலிருந்து பறிக்கப்பட்டு மோட்சத்தில் நடப்பட்டது. அப்பொழுது மரியாவின் வயது 11 வருடம், 8 மாதம், 20 நாள். உயிருடனிருந்தபோது அழகாயிருந்தமரியா மரித்த பிறகு விசேஷ சௌந்தரியமுள்ளவளாகக் காணப்பட்டாள். அவள் கிறீஸ்துநாதரில் தூங்கிக் கொண்டிருந்தாள். கற்பைக்காப்பாற்றுவதற்காக நடக்கும் போராட்டத்தில் அவளுடைய உதவியைத் தேடுகிறவர்கள் கைகண்டபலன் அடைந்துவருகிறார்கள்.

அலெக்சான்டர் றோமாபுரி நியாயஸ்தலத்தில் விசாரணை செய்யப்பட்டுக் குற்றவாளியானான். அவன் 21 வயதுக்குக் குறைந்தவனாக இருந்தமையால் அவனுக்கு 30 வருடக் கடுங்காவல்தண்டனை விதிக்கப்பட்டது. அலெக்சான்டர் 1910-ம் ஆண்டு மரியாவின் விசேஷ புதுமையால் மெய்யானமனஸ்தாபப்பட்டு முற்றிலும் மனந்திரும்பினான். இப்பொழுது இத்தாலியில் ஒருசந்நியாசமடத்தில் ஒருதோட்டக்காரனாக இருந்துவருகிறான்.

1938-ம் ஆண்டு ஆனிமாதம் 1-ந் திகதி, அதாவது மரியா மரித்து 36 வருடங்களுக்குப் பிறகு அவளுக்கு முத்திப்பேறு பெற்றபட்டம் கொடுப்பது தகுமா என்று தீரவிசாரணை தொடங்கியது. 1947-ம் ஆண்டு அந்தவிசாரணை முடிந்தது. பரிசுத்ததந்தை 12-ம் பத்திநாதர் 1947-ம் ஆண்டு சித்திரைமாதம் 27-ம்திகதி றோமாபுரி அர்ச். இராயப்பர் மகாலயத்தில் மரியா தெரேசா கொறெற்றிக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளினார். 24-6-1950-ம் ஆண்டு ஐந்து லட்சம்சனங்கள் கூடியிருந்த சமுகத்திலே அர்ச். இராயப்பர் மகாலயத்துக்கு முன்பாயிருக்கும் சரித்திரப்பெருமை பெற்ற பரந்தமைதானத்தில் நமது பரிசுத்தபிதா மரியாவுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளினார். அப்பொழுது அசுந்தா ஓர் விசேஷ ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். அசுந்தாவே கற்பரசிமரியாவின் தாய். என்னே தாயின்மகிமை! இப்பொழுது அசுந்தாவுக்கு வயது 87.

அன்று பரிசுத்தபாப்பரசர் அங்கு சமூகமாயிருந்த சிறுமிகளைப்பார்த்து, ஒலிபரப்பும் கருவியின்மூலம் போதித்தபோது, "நீங்களும் உங்கள்கற்பைக் காப்பாற்றுவீர்களா" என்று அன்பாகக் கேட்டார். "ஆம், ஆம்" என்று எல்லாச்சிறுமிகளும் ஒரேதொனியாகக் கத்தினார்கள். நம்நாட்டுச்சிறுமிகளும், இளம் பெண்களும் தங்கள்கற்பைக் காப்பாற்றி அடக்கஒடுக்கமாகவும், முன்மாதிரியாகவும் சீவித்தால் அவர்கள் தவறான வழிகளில்நடக்க அநேகமாகச் சந்தர்ப்பம் கிடையாது.

வாலிபர்களும் கெட்ட கருத்துக்களுடன் பெண்களைப்பார்க்கும்பொழுது, யேசுநாதர் சற்பிரசாதக்கூட்டில் உண்மையாகச் சீவிக்கிறதைப்போல், அப்பெண்களின் இருதயங்களில்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

ஆவணிமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 8 | அ. சிறியாக்குசப்பர் | (சி) |
| சனி | 9 | அ. வியான்னியருளப்பர் | (வெ) |
| ஞா | 10 | இஸ்பிரீத். ஆகமனத்தின் பின் 10-ம் ஞாயிறு—அ. லவுறேஞ்சியார் | (சி) |
| திங் | 11 | அ. திபுர்சியார் | (சி) |
| செ | 12 | அ. கிளாரம்மாள் | (வெ) |
| புத | 13 | அ. இப்பொலித்தார் | (சி) |
| வி | 14 | அ. எயுசேபியார் (சுத்தபோசனம்) | (ஊ) |

சத்தியவேத
# பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
ஆவணி மாதம் 7-ந்திகதி

## நாம் யாது செய்யலாம்?

இன்றைய உலகம் மிக்க பரிதாபகரமும், பயங்கரமுமான நிலைமையிலே இருந்து வருகின்றது. அதனை வெற்றிகொண்டு ஆதிக்கஞ்செலுத்தவென்று தீய பலங்கள் ஒரே கும்பலாகச் சேர்ந்து, கடவுள் இல்லாமலே மனிதசமூகத்தில் ஓர் உச்சஸ்தானம்வகிக்கும் நவீன நாகரீகம் ஒன்றை ஆக்கிவிடுவான் கங்கணங்கட்டிநிற்கின்றன. கம்யூனிஸ்த இரும்புத்திரையானது மேலும் அதிகமான நாடுகளைத் தனது அடிமைத்தளையுள் கொண்டுவரமுனைந்து ஆழஅகலப் பரந்து கொண்டிருக்கிறது. அதனால் மற்றோர்யுத்தம் மூண்டு கொள்ளாமல் தடுத்து வைக்க என்ன செய்யலாம்? அகிலசராசரங்களினதும் சிருஷ்டி கர்த்தாவை—எல்லாம் வல்லகடவுளை மனுக்குலமானது விசுவசியாமலும், வழிபடாமலும், நேசியாமலும் இருக்க வேண்டுமென்ற தனதுமூடத்துவ நாஸ்திககொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ள கம்யூனிஸ்த தீய பிரசாரத்தின் அபாயத்தைத் தடுத்து மனித வர்க்கத்தைக் காத்துவைக்க நாம் யாதுசெய்யலாம்?

உலகினைப் பரிநாசஞ்செய்யத் தேடும் இந்தத் தீயபலங்களை அடிபாறச்செய்து அடியோடு களைந்துவிடத் தகுந்த அரிய உபாயங்களைப் பரிசுத்த தேவதாயாரே நமக்குத் தெரிவித்திருக்கின்றார். பாத்திமாவிலே மூன்று இடைப்பிள்ளைகளுக்கும் அளித்த காட்சிகளின்போது அந்தஉபாயங்களை அவர் நமக்கு அறிவிக்கத் திருவுளமானர். அவையாவன: தபம், தினசெபமாலை—விசேஷமாய்க் குடும்பசெபமாலை, தமது மாசில்லாத இருதயப்பக்தி ஆகியமூன்றுமே. பாத்திமாவிலே தேவதாயார் அளித்த காட்சிகள் ஆறையும் ஈண்டு விரித்துக்கூறுவது இயலாக்கருமமாகும். ஆனால், இந்த ஆவணி மாதத்துக்குரிய பக்தியனுசாரமாகிய மாசில்லாத இருதயப் பக்தியைக்குறித்து மாதா வெளிப்படுத்தியதை மாத்திரம் இப்போது ஆராய்வோம்.

ஆடிமாதம்13-ந்திகதிஅளித்த மூன்றாவது காட்சியின்போது, உலகில் தமது மாசில்லாத இருதயப்பக்தி ஏற்படுத்தப்பட வேண்டுமென்று மாதா கேட்டுக் கொண்டார். பாத்திமாவின் செய்தியிலே இந்தப்பக்தியானது அதிகம் முக்கியபாகமாய் இருப்பதை அந்த மூன்றாவது காட்சிமூலம் நாம் காண்கிறோம். இந்தக்காட்சியிலே பாவிகள் போய்விழுகின்ற நரகத்தின் காட்சி மூன்று பிள்ளைகளுக்கும் காண்பிக்கப்பட்டது. "இந்த நிர்ப்பாக்கியபாவிகள் எத்தனையோபேர் புதைக்கப்படும் நரகத்தைக்கண்டீர்கள். இவர்களைக் காத்துஇரட்சிக்கும்படியாக உலகில் எனதுமாசில்லாத இருதயப்பக்தியை ஏற்படுத்த வேண்டுமென ஆண்டவர் விரும்புகின்றார். நமது வேண்டுகோள்கள் பூர்த்திசெய்யப்படின் எத்தனையோ ஆத்துமங்கள் இரட்சிக்கப்படும். உலகில் சமாதானம் உண்டாகும்" எனக் கூறி இந்தப்பக்தியை அனுசரிக்கும்முறையையும் நமக்குத் தெரிவித்தருளினர். "நமது மாசில்லாத இருதயத்திற்கு ரூஷியாவை ஒப்புக்கொடுக்கும்படியும், அத்துடன் மாதத்தின் முதற்சனிக்கிழமையிலேபரிகார நன்மை வாங்கும்படியும் நாம் கேட்டுக்கொள்வோம்" என்று அவர் வசனித்தருளினர். கடைசியாக நமக்கு ஆறுதல்உண்டாகும்படியாக, என்ன கேடுகள் தான் வந்தபோதிலும் "ஈற்றில் நமது மாசில்லாதஇருதயம் வெற்றிகொள்ளும்" என்று அருளிச்செய்தார். ஆதலால், இந்தப் பக்தியைத் தவறாது அனுசரித்துவரப் பிரயாசப்படுவோமாக!

---

### இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்
## 10-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(லூக். 18: 9—14)

அக்காலத்தில் தங்களை நீதிமான்களாக நம்பிக்கொண்டு, மற்றவர்களை நிந்திக்கும் சிலருக்கு யேசுநாதர் சொன்ன உவமையாவது: ஒருவன் பரிசேயனும், மற்றொருவன் ஆயக்காரனுமாகிய இரண்டுமனிதர் செபஞ்செய்யத் தேவாலயத்துக்குப் போனார்கள். பரிசேயன் நின்றுகொண்டு, தனக்குள்ளே செபித்ததாவது: சர்வேசுரா, திருடர், அநீதர், விபசாரராகிய மற்ற மனிதரைப் போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் நான் இராததைப்பற்றி உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துகிறேன். வாரத்தில் இருமுறை ஒருசந்தியாயிருக்கிறேன்; எனக்கு உண்டான யாவற்றிலும் பத்தில் ஒருபங்கு கொடுக்கிறேன் என்றான். ஆயக்காரனோவென்றால் தூரத்திலேநின்று, தன் கண்களை முதலாய் வானத்தைநோக்கி உயர்த்தத்துணியாமல், தன் மார்பில் அடித்துக்கொண்டு: சர்வேசுரா, பாவியாகியஎனக்குத் தயாபரராயிரும் என்றான். அவனைவிட இவனே நீதிமானாகித் தன்வீட்டுக்குத் திரும்பிப்போனானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில், தன்னைத் தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

## சுதேச வர்த்தமானம்

### குருமார் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. குருப்பிரசாதிகளின் வருடாந்த முதலாவதுஞானஒடுக்கம் நிகழும் ஆவணிமாதம் 21-ந் திகதி ஆரம்பமாகி 28-ந் திகதி முடிவாகும். இரண்டாவதுஞானஒடுக்கம் 29-ந்திகதி ஆரம்பமாகி அடுத்தபுரட்டாசிமாதம் 5-ந் திகதி முடிவாகும். மூன்றாவது ஞானஒடுக்கம் புரட்டாசிமாதம் 15-ந் திகதி ஆரம்பமாகி 22-ந் திகதி முடிவாகும். முந்திய இருஞானஒடுக்கங்களும் கொழும்பு, சென் பேணுட் குருமடத்தின் தலைவராகும் வண. மாட்டீன் குணரத்தின சுவாமியவர்களாலும், மூன்றாவதுஞானஒடுக்கம் இந்தியாவிலிருந்து வரவிருக்கும் கார்மேல்சபையைச்சேர்ந்த வண. மார்செல் சுவாமியவர்களாலும் போதிக்கப்படவிருக்கின்றன.

### பிரதமரின் வேண்டுகோள்

இலங்கையைத்தவிர வேறெந்த நாடாவது ஒருபடி 25 சதவீதமாக அரிசி விற்பதில்லை; ஆனால், பிறநாடுகளிலே நமது தேயிலை, றப்பர், தேங்காய்க்குள்ள நாட்டம் குறைந்துகொண்டே போகுமானால் ஏற்றமாயிருக்கும் உலகசந்தைவிலையிலே அரிசிவாங்கி இவ்வளவுகுறைந்த விலைவீதத்திலே பாவனையாளருக்கு அதை விற்பனைசெய்வது இயலாக்கருமமாகும் என்று அளவத்துக்கொடையில் நிகழ்ந்தகூட்டமொன்றில் பிரதமர் டட்லி சேனநாயக அவர்கள்பேசித் தங்கள் காணிகளைப் பூரணமாகப் பண்படுத்தி உணவுப்பயிர்செய்து, அச்சுறுத்திக்கொண்டிருக்கும் நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்ளத் துணைச்செய்யுமாறு சனங்களைக் கேட்டுக்கொண்டார்.

### மருத்துப்பூண்டுக்கமம்

அரசாங்கம் ஸ்தாபிக்க எண்ணும் மத்தியசுதேச அவுடதபாகசாலையின் நன்மையைக்கருதிச் சுதேசவைத்திய சபையானது வடமத்தியமாகாணத்திலே 50 ஏக்கர்கொண்ட முடிக்குரிய காணியிலே மருத்துப்பூண்டுகள் செய்கைபண்ணும் கமம்ஒன்றைத் திறப்பதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறது. அதற்கிடையிலே ஆயுள்வேத வைத்தியர்களின் ஸ்தாபனம் ஒன்று அம்மாகாணத்திலேயே மருத்துப்பூண்டுக் கமம்ஒன்றைத் திறப்பதற்காகத் தனக்கு 100 ஏக்கர் முடிக்குரிய காணி தரவேண்டுமென மனுச்செய்து அனுராசபுரப் பகுதியிலே 10 ஏக்கர் காணி பெற்றுள்ளது. அதன்முயற்சி வெற்றியளிக்குமானால் அதற்கு மேலும் காணிஉதவப்படும்.

---

— ஐக்கியநாடுகள் கோறியாவிலே ஓர் யுத்தநிறுத்தத்தை அடையவிருக்கின்றன; முக்கியமாக ஏனெனில், கம்யூனிஸ்தர்களே அதைவிரும்புகிறார்களென்று சமீபத்திலே கோறியா, யப்பான், பிலிப்பைன்ஸ்நாடுகளைச் சுற்றிப் பார்வையிட்டுக்கொண்டு வாஷிங்ரன் நகர் திரும்பியிருக்கும் அட்மிறல் வில்லியம் பெச்லெர் கூறுகின்றார்.

—மணித்தியாலம் 2,000 மைலுக்கு மேல் செல்லக்கூடியதும், எந்த வெடிகுண்டு விமானத்தைக் காட்டிலும் அதிகமான உயரத்துக்கு எழக்கூடியதும், குறித்த இலக்கை நோக்கிச் செலுத்தப்படத்தக்கதுமான எறியாயுதம்ஒன்றைப் பிரித்தானி கண்டுபிடித்துச் செய்திருப்பதாக அதன்மந்திரிமாருள் ஒருவரான திரு. டன்கன் சான்டிஸ் தெரிவிக்கின்றார்.

நல்லூர் மீசாம்

## எப்படி அப்பா முகமாலை?

சென்றவருடம் எனக்கு லீவு. பல வருடங்களாக எனக்கு முகமாலை அர்ச். பிலோமினம்மாள் திருநாளுக்குப் போகக்கிடைக்கவில்லை. இவ்வருடமென்கிலும் போவோம் என்றுசொல்லிப் புறப்பட்டேன். புறப்படுகையில் "தம்பி! முகமாலைக்காக்கும், கூத்துப் பார்க்கவாக்கும்" என்று எனதுதகப்பனர் சொல்லக்கேட்டேன். கேட்டதும் எனதுமனம் சோர்ந்தது. சிறுவம் தொட்டு நான்நேசித்த இப்பதியை இவ்வளவு இளக்கமாகப்பேசவோ என்றுஎண்ணினேன். போகவோ என் மனம்ஒப்பவில்லை. ஆயினும் எடுத்தபயணத்தை விடக்கூடாதென்று முகமாலை அர்ச். பிலோமினம்மாள் திருப்பதிக்குப்போனேம்.

சாயந்தரம் 3-30 மணிபோல் யாழ்ப்பாணப் பஸ்ஏறி 4-30 மணிபோல் முகமாலைபோய்ச் சேர்ந்தோம். நேரே கோவிலைநாடினேன். திருச்சுரூபத்தின் முன் முழந்தாட்படியிட்டேன். கோவிலுக்குள்ளேயோ ஒருவரையும் காணவில்லை. சற்றேஅதிசயப்பட்டேன். என்மனதில் நூதனமானஉணர்ச்சிகள் தோன்றின. செபம்செய்யவோ மனம் வரவில்லை. சுருக்கமாக எனதுசெபத்தை முடித்துக்கொண்டு வெளியே சென்றுபார்த்தேன்.

கண்டேன் ஒருகாட்சியை. பரிதாபகோலம்கொண்ட ஓர்உயர்ந்தசிலுவையில் அறையுண்ட திவ்வியயேசுவின் திருச்சுரூபத்தை நான்குவாலிபர்கள் தாங்கிநின்றனர். சுவாமியார்ஒருவர் பிரசங்கஞ்செய்தார். வெயில் உக்கிரமாய்எறிக்க, முகங்களெல்லாம் சலம் சலமாய் வேர்க்க, கும்பிமணலோ, குறுணிக்கல்லோ, குப்பையோ, முட்செடியோபாராமல்சனங்கள்நெடுமுழங்காலில் இருந்தபடி கைகூப்பியவண்ணம் செபித்துக்கொண்டிருந்தார்கள். பெரிய சிலுவைப்பாதையில் நான்காம் ஸ்தலம் நடைபெற்றது. நானும் முழந்தாளில்இருந்தேன். இப்படியே ஒவ்வொருஸ்தலமாய்க் குருவானவர் விரித்துரைத்து வழிநடத்தப் பெரியசிலுவைப்பாதை நடந்தேறியது.

பதினாண்காம்ஸ்தலம் முடிந்ததும் திருச்சுரூபமும் கோவில்வந்துசேர்ந்தது. பரிபூரணபலனுக்குரிய செபங்கள் முடிந்தபின் திருப்பண்டங்கொண்டு ஆசீர்வாதம் அருளப்பட்டது. நோயாளர் அதிவிநயமாய் அர்ச். பிலோமினம்மாளின் சலிகையை வேண்டிநின்றார்கள்.

சற்றுநேரம் அங்குமிங்கும் சனங்கள் கும்பல்கும்பலாய்ச் சம்பாஷித்தனர். சிறிதுவேளையில் ஒலிபரப்பி பேசத்தொடங்கியது. அதற்குவாய் உளையவில்லையாக்கும். ஒரேபிரியதத்தமாய்தான் இருந்தது. சனங்கள் அங்குமிங்கும்பார்த்தார்கள். நின்றவிடத்தில் ஒரேஇரையாய் இருந்துவிட்டார்கள். கால்விறைப்புமாற அங்குமிங்குமாக அசைந்தார்கள்அல்லாது எடுத்தசெபமாலையையோ கைவிடவில்லை. அவர்கள் வாயுமோ ஓயவில்லை. சொல்லச்சொல்லச் சந்தோஷமாகஇருந்தது. அதனால் விடவோமனம்வரவில்லை. பசியும்தெரியவில்லை. வேஸ்பர்ஆரம்பமாகுமட்டும் செபமாலை சொல்லப்பட்டேவந்தது. கட்டுச்சாதம்கொண்டுவருவோர் வேஸ்பருக்கு முன்சாப்பிடுவதுவழக்கம். ஆனால், பசியும்தோன்றாததால் இம்முறை வேஸ்பர்முடிந்தபின்னரே சாப்பிட்டார்கள். அப்படிப்பட்டோருக்குத் தண்ணீரும் அருந்தலாய்த்தான் போய்விட்டது. (இம்முறை போதியதண்ணீர்வசதிகள் செய்யப்படுகின்றன.)

வேஸ்பருக்குப்பின் திருப்பண்ட சுற்றுப்பிரகாரம்நடந்தது. ஆறுயிரவருக்கதிகமானோர் மெழுகுவர்த்திகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையாய்ச் செல்லுவதானல் எவ்வளவுசிறப்பாய் இருந்திருக்கும்?

ஆனல், என் மனதைக் கவர்ந்தது இராவாராதனையே. வேஸ்பருக்குப் பின் இதற்கென ஆயத்தப்படுத்தப்பட்ட மண்டபத்தில் திவ்விய சற்பிரசாதம் எழுந்தேற்றம்செய்து வைக்கப்பட்டது. நாடகமன்றுத்ததாம். ஆனல், அது எங்கேநடந்ததென்று எனக்குச் சரியாய்த் தெரியாது. சற்பிரசாதஆராதனை நடந்தவிதத்தில் முழுச்சனங்களும் அங்கேயே இருந்திருக்க வேண்டுமென்று நினைத்தேன். செபங்கள், பிரசங்கங்கள், பாட்டுகள் இவையெல்லாம் இரு குருமாரால் வழிநடத்தப்பட்டன. அன்றைய பகல்முழுவதும் பன்னிருகுருமார் பாவசங்கீர்த்தனம்கேட்டது போதாதென்று இப்போல் இராமுழுவதும் இருகுருமார் பாவசங்கீர்த்தனம் கேட்டவண்ணமாக இருந்தார்கள். ஆய்ந்தோய்ந்த ஆறுதலாய் நடந்த இரட்சகருடன் எமது இருதயத்தைத் திறந்துபேச இது ஒரு அருந்தருணம் அல்லவா?

அடுத்தநாட்காலை திவ்விய பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் முடிந்தவுடன் கொரிப்பட்டுக்கொண்டு றெயினில் ஏறிய சனங்களுடன் நானும் ஏறிவீட்டுக்குத் திரும்பினேன். திருப்பதியைவிட்டு வெளியேறுமுன்னம் அர்ச். பிலோமினம்மாளிடம் நான் ஒருவிடை கேட்டேன். பணம், பண்டம், உத்தியோகஉயர்வு ஒன்றையும் நான் கேட்கவில்லை. இவையொன்றும் அந்தநேரத்திலே என்மனதில் இருக்கவில்லை. இருந்தால் கேட்டுத்தான் இருப்பேன். அர்ச். பிலோமினம்மாளே, நான் இதுகாலவரை தேவனை நேசித்ததிலும் பார்க்க இனிமேல் ஒருபடிகூட நேசிக்கப்பண்ணுமென்று வேண்டிக்கொண்டேன். அவவும் எனதுவிடையை அளித்திருக்கிற என்று தான் நம்புகிறேன். பலதுன்பதுயரங்கள், கஸ்திகள் எனக்குவந்துபோயின. இவையெல்லாவற்றையும் தேவநேசத்தில் நான் வளருவதற்கு ஒவ்வோர்கருவிகளாக அர்ச். பிலோமினம்மாள் பாவித்திருப்போலும். அவவுடையநாமம் புகழப்படுவதாக.

மேற்காணும் பொழிப்பைக்கொண்ட ஓர் கடிதத்தை நமக்கு எழுதியனுப்பிய நண்பருக்கு எமதுநன்றி. யாத்திரிகர்களின் பலவித்தவசதிக் குறைவுகளை அவதானித்தநாம் இவ்வருடம் பலதிருத்தங்களைச் செய்துள்ளோம். சென்றவருடத்தண்ணீர்த்தட்டுப்பாட்டை நீக்க விசேஷ நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். ஒரு குறையைமாத்திரம்நீக்க எம்மால் முடியாமற்போனது. ஒரு சற்பிரசாத சிற்றலயம் இவ்விடத்தில் அவசியம்தேவையென்று வெகுகாலமாய்உணர்ந்தோம். ஒரு சிற்றலயத்தை ஆக்குவதே எமது ஆவல். சகலருடையவும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

மெயில்றெயினைத்தவிர மற்றறெயின்களெல்லாம் 21-ந் திகதி தொடக்கம் கோவிலுக்குமுன்னுல்நிற்கும். கடைநாட்களில் விசேஷபெட்டிகள் தொடுக்கப்படும். பஸ்பிரயாணிகளுக்கும் விசேஷஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### திருநாள்

15-ம் திகதி ஆரம்பமாகும். 23-ந் திகதி மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம், வேஸ்பர், ஆசிர்வாதம். 24-ந் திகதி 7 மணிக்குப்பாடற்பூசை, பின்னர் சுற்றுப்பிரகாரம்.

ஓடர் அனுப்புவது:
Sub-Post office,
NALLUR.

விலாசம்:

Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

புத்தக மதிப்புரை

## "தோத்திரப் பாமாலை"

ஆசிரியர்: தூத்துக்குடிப்புலவர் யம். பி. மாஸ்கரேனஸ்அவர்கள். திருச்சிராப்பளி, அர்ச். சூசையப்பர் கைத்தொழிற் பாடசாலை அச்சகத்தில் பிரசுரஞ்செய்யப்பெற்றது. 19 பக்கங்கள் கொண்டது. விலை பிரதி அணா 5. கிடைக்குமிடங்கள்:- 1. பெஸ்கி நிவாஸ் தூத்துக்குடி,— 2. ஒற்றுமைநிலையம் 8, வியாசராவ்தெரு, தியாகராயநகர், சென்னை 17.

"மாலையொன்று வேண்டும்—மரியனையாள் தாட்கெனவே ....." என்று தொடக்கி, அன்னைதிருவடிக்குச் சாத்தப்பெற்றுள்ள இந்தத் தோத்திரப் பாமாலை நூறு அழகான பாக்கள் கொண்டு புனையப்பட்டுள்ளது. மாமரி அன்னைபால் பக்திப்பரவசம் உண்டுபண்ணும் பெற்றிவாய்ந்தனவாய் அத்துணை கனிவாகவும், கருத்தைஈர்த்து கொள்ள வல்ல அத்துணை இனிமையாகவும் இசைக்கப்பெற்றுள்ள இந்தத்தோத்திரப்பாமாலையானது கண்ணைக்கவரும் கவின்மிக்க சுகந்தமலர்மாலைக்கோ, அன்றேல் நவரத்தினங்கள்பதித்த விலைபெற்ற கனகமலர்மாலைக்கோ எதற்கும் இணையாகமாட்டாதெனலாம். இதனைப்படிக்குந்தோறும் யாழ்ப்பாணத்திலே தமிழ்ப்பெரும் புலவராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற வண. J. இப்பொலிற்சுவாமியவர்கள் மருதமடுச் செபமாலை அன்னைபேரில் இசைத்த அந்தஉருக்கமான பதிகப்பாக்கள் நமது ஞாபகத்திலே வருகின்றன. இத்தோத்திரப்பாமாலைக்கு வண. பிரான்சீஸ் முறுயிஸ் S. J. சுவாமிகள் அளித்துள்ள அணிந்துரையில் எடுத்துக்காட்டியிருப்பதே நாம் எழுதியுள்ளதற்குப் போந்தசான்றாகும். அஃதாவது:

"தோத்திரப் பாமாலை இளமைவனப்புடன் உளங்கவர்கின்றது. தேவஅன்னையின்மீதுள்ள பக்திஉணர்ச்சி பெருக்கெடுத்து வருகின்றது. செய்யுள்நடையும் சிறந்துவிளங்குகின்றது. எதுகை மோனை இயல்பாய் எழுந்து இனிமையூட்டுகின்றன. பாமாலையின் விசேஷ கவர்ச்சிக்குக் காரணம், அதன் பக்திச் சுவையுடன் கவிதையில் குன்றாது குறையாது வழிந்தோடும் இனியமெல்லியநாதமே. இக்கவிதைகளைப் பாடும்போது தாயுமானவரது பராபரக்கண்ணிகள் என்ஞாபகத்திற்கு வரும். நூலின்நயத்திற்கு எடுத்துக்காட்டாக எத்தனையோ செய்யுட்களைத் தரலாம். அச்செய்யுட்களைத் தெரிந்து அநுபவிப்பது பாடுவாரின் மனநிலையைப் பொறுத்தது. கீழே இருகவிதைகளைமட்டும் குறிக்கின்றேன்.

செங்கால் இளஅனங்காள் தீந்தேன்
இசைக்குயில்காள்
அங்கா மடமயில்காள் அருஞ்சொற்
கிளிஇனங்காள்
பைங்கால் மலர்ப்பொழில்வாய் பல்லூர்
திரிகுவிரால்
எங்கேனும் கண்டனிரோ எந்தாய்
மரியனைபோல்

கோடாத செங்கோலே குறையா உயர்
வனமே
வாடாத மென்மலரே வானழகே
மக்களனைத்
தேடாத நாளுமில்லை, தெரிந்தளவு
நின்றனையான்
பாடாத நாளுமில்லை பரஞ்சுடரே
பாக்கியமே.

நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றேம்.

## கம்யூனிஸமும் கிறீஸ்தவமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானம், சமாதானம் என்று சொல்லும் அதேசமயத்தில் வர்க்கப்போரையும், சமரசத்திற்கு இணங்காத பகையையும்போதித்துவருகிறது. "உள்நாட்டுக்கலகத்தின் கொடியைத் தூக்கிப்பிடிப்போம்; மக்களிடையேயுள்ள சச்சரவுகளைப் பயன்படுத்திக்கொண்டு இன்னும் அதிக பிளவை உண்டுபண்ணுவோம்; விரோதிகளாய்இருப்பவர்களிடையே இன்னும்அதிக விரோதத்தை மூட்டுவோம்" என்று கூறியுள்ளார்லெனின். 'சமாதானம், சமாதானம்' என்று கம்யூனிஸ்தர்கள் சொல்லிக்கொண்டேயிருக்கின்றனர். ஆனல், 1945-ம் ஆண்டிலிருந்து ஆயுதப்பரிகரணம செய்யாமல் யுத்தசன்னத்தமாகவே இருந்துவருவது கம்யூனிஸ்தகோஷ்டி ஒன்றே.

(தொடரும்)

## தங்கயூபிலி கொண்டாடும் லீலிமலர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வசிக்கிறர்; அவர்கள் இஸ்பிரீத்துசாந்துவின் ஆலயங்கள் என்று பூரணவிசுவாசத்தோடு நம்புவார்களானல், அவர்கள் இந்தத்தேவனின் ஆலயங்களைக் கறைப்படுத்தக் கனவிலும்கருதமாட்டார்கள். மரியாயின் மாசற்ற இருதயத்தின் மாதமாகிய இந்த ஆவணிமாதத்திலே யேசுவின் திரு இரத்தத்தை மாமரியின்மாசற்ற இருதயத்தின்வழியாகப் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுத்துக் கற்புள்ளவர்களாகச் சீவிக்கப் பிரயாசப்படுவோமாக.

நீர்வேலி

## பரலோக மாதா கோவிற் திருநாள்

ஆவணிமாசம் 9-ந் திகதி ஆரம்பமாகி ஆவணிமாசம் 16-ந் திகதி இரவு 8 மணிக்கு வேஸ்பர், 17-ந் திகதிகாலை 5-30 மணிக்குத் திவ்வியபூசை. பின்னர் சுற்றுப்பிரகாரம், விருந்தோடு முடிவாகும்.

J. A. Rajanayagam,
கட்டளைக்குராவர்.

## GOVERNMENT TENDERS

### Department of Industries

The Chairman, Tender Board, Ministry of Industries & Fisheries, Colombo, will receive tenders up to 12 noon on 22-8-52 for the construction of semi-permanent buildings on land at Thirunelvely North, Jaffna, for the establishment of a Brass Workshop. Tenders shall be made on forms obtainable from the Dept. of Industries (General Industries Divn.) Block 'E' Colombo—1. Particulars on the subject can be obtained at the above office.

### Jaffna Kachcheri

N2180—The Chairman, Tender Bd., Ministry of Labour and Social Services, Colombo, will receive tenders up to 12 noon on 19-8-52 for construction of a well 9 ft. internal diametre and 21 ft. including steining, plastering well sweep, apron etc. at Perunkadu, Punkudutivu.

### Mannar Kachcheri

N2241—Notice is hereby given that the sale of Foreign Liquor Tavern Rents, Mannar District, 1952/53, will take place on 21-8-52. Tenders should reach the Kachcheri before 10-30 a. m. on the date fixed.

For particulars see Part I—Section II, Govt. Gazette, 1-8-52, copies of which are available for perusal at all Post Offices.

நமது அச்சியந்திரசாலைப் புத்தகசாலையில்

## விற்பனைக்கிருக்கும் கத்தோலிக்க புத்தகங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| சின்னக்குறிப்பிடம் ... | 15 |
| பெரியகுறிப்பிடம் ... | 30 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 25 |
| உறுதிப்பூசுதற்குறிப்பிடம் ... | 05 |
| ஞானேபதேசபாடத்திட்டம் ... | 90 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரணசெபங்கள் ... | 2-00 |
| திவ்வியபூசையின் சாதாரணசெபங்கள் ... | 60 |
| மோட்சபாதை (கலிக்கோ) ... | 5-00 |
| " " (தோல்) ... | 7-50 |
| முத்தித் திறவுகோல் (தோல்)... | 3-50 |
| ,, ,, (கலிக்கோ) ... | 2-50 |
| செபச்செண்டு ... | 1-00 |
| திவ்வியபூசைப்பலியின் பேரில் தியானங்கள் ... | 1-00 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிஷேங்களின் ஒப்புமை ... | 2-95 |
| பசாம் ... ... | 1-50 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| சத்தியவேத ஞானக்கீர்த்தனங்கள் ... | 75 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| நவதின உற்சவம் ... | 75 |
| சற்பிரசாத அன்பன் ... | 30 |
| தருமஅப்பம் ... | 1-00 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்கிஷம் ... | 1-50 |
| மருதமடு யாத்திரைக் கைத்துணை ... | 50 |
| பத்திமாமாதாவும் செபமாலையும் ... | 25 |
| அவர்கள் மூன்றுசிறுவர்கள் (பத்திமா) ... | 2-50 |
| மகாமனந்திரும்புதல் இயக்கப்பிரசங்கங்கள் ... | 1-00 |
| ஞானவொடுக்க பிரசங்கங்கள் (அச்சில்) ... | |
| திவ்வியபூசைமகத்துவம் ... | 2-50 |
| பூசைஉதவி மந்திரம் | 40 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| (Part II) ... | 90 |
| (Part III) (அச்சில்) ... | |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி ... | 70 |
| பத்திச்சபைகள் ... | 20 |
| ஆத்துமதரிசனம் ... | 20 |
| சத்தியவேத தர்ப்பணம் (Part I) போதக காண்டம் ... | 2-50 |
| மன்னார் வேதசாட்சிகள் ... | 1-00 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| ஹெலேனா அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக்கன்னிகைசரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவியசரித்திரம் ... | 40 |
| நானே குற்றவாளி ... | 1-00 |

விலாசம்:

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அருமைச் சகோதரங்களே !

இது ஆவணி மாதம். உங்கள் பாடசாலையின் ஆவணி விடுமுறை இதோ வந்துவிட்டது. உங்களுள் பலர் இந்த விடுமுறை காலத்தை எவ்விதம் கழிப்பது என்று நினைப்பீர்கள். ஒரு மாதம் பாடசாலை இல்லை; படிப்பு இல்லை; பகல்முழுவதும் நன்றாக விளையாடலாம் என்று சொல்லி மகிழ்ச்சி கொள்வீர்கள். விளையாடுவது நன்றுதான். ஆனால், நாள் முழுவதையும் விளையாட்டில் செலவிட்டு வந்தால் உங்களை விளையாட்டுப் பிள்ளைகள், வீண் பொழுது போக்கும் பிள்ளைகள் என்று பிறர் பரிகாசம் செய்வார்கள். ஆதலால் விடுமுறை காலத்திலே நீங்கள் காலை நேரத்தைக் கோவிலிலும், பின்னர் சின்னச்சின்ன வேலைகளைச் சந்தோஷமாய்ச் செய்வதிலும், "பாலர் பக்க"த்துக்குச் சின்னக் கதைகள், சிறுசிறு பாட்டுகள், வேறும் புத்திக்குரிய காரியங்கள் எழுதி அனுப்புவதிலும், பெற்றோருடன் சேர்ந்து செபமாலை செபிப்பதிலும், படிப்பிலே நீங்கள் குறைவாய் இருக்கும் பாடங்களை ஆயத்தம் செய்வதிலும், நல்ல வாசினையிலும், வேறும் நல்ல கருமங்களிலும் செலவிடுதல் நல்லது. மற்றப்படி நேரத்துக்கு நேரம் சாப்பிட்டுக்கொண்டு விளையாட்டிலும், வீண் பொழுது போக்கிலும் விடுமுறையைக் கழித்தால் நீங்கள் காலத்தின் அருமையை அறியாதவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும் அல்லவா?

உங்கள் அன்புள்ள
அண்ணா

## பொய்யல்ல

1

மண்ணுக்குள்ளே நெருப்பிருப்பது பொய்யல்ல
மலையைச்சிறிய வேர்பிளப்பது பொய்யல்ல
கண்ணுக்குள்ளே நரம்பிருப்பது பொய்யல்ல
கவலைக்குள்ளே சுகமிருப்பது பொய்யல்ல.

2

கல்லுக்குள்ளே நீர்சுரப்பது பொய்யல்ல
கடுகுசிறிது காரம்பெரிது பொய்யல்ல
கல்விக்குள்ளே உயர்விருப்பது பொய்யல்ல
காற்றுக்குள்ளே உயிரிருப்பது பொய்யல்ல.

3

கடலுக்குள்ளே மலையிருப்பது பொய்யல்ல
கரும்புக்குள்ளே சுவையிருப்பது பொய்யல்ல
உடலுக்குள்ளே பிணியிருப்பது பொய்யல்ல
உண்மை, பொறுமை உலகிற்பெரிது பொய்யல்ல.

'ஜெயம்'

## சிறுதுரும்பும் பற்குத்த உதவும்

சிறுவராகிய நாம் உற்றூர்க்கும் மற்றூர்க்கும் நம்மால் செய்யக்கூடிய காரியங்களை "இவை அற்ப செயல்கள்; இவற்றால் ஆம்பயன் என்ன?" என்று அலட்சியமாய் விட்டு விடுகின்றோம். இது தவறாகும். "சிறுதுள்ளி பெருவெள்ளம்." சின்னஞ்சிறிய மணல்மணிகளாலும், சிறுநீர்த் துளிகளாலும் சிருஷ்டிக்கப் பட்டதுதான் இச்சிறந்த மாநிலம். அன்றியும் சிறுதுரும்பாயினும் அது பற்குத்தவாவது உபயோகப் படுகின்றது அல்லவா? எத்தனையோ சின்னஞ்சிறு காரியங்கள் நம்வாழ்க்கையில் பெரும்பயனையும், புகழையும் தந்து உதவுகின்றன.

* * *

அன்றுமாலை இளந்தென்றல் தேன் நிறைந்த மலர்களையும், மாந்தளிர்களையும் முத்தமிட்டு மகிழ்ச்சி கொண்டாடியது. அடிவானத்தில் ஆதவன் மறைய மனமற்றவன் போல் மங்கிய தன் ஒளி வீசி மக்களையும், மரங்களையும் மகிழச் செய்தான். இருக்கை தேடி விரைந்த பறவைகளின் இறக்கைகள் அவ்வொளி பட்டதும் பொன்னெனப் பொலிந்தன. எங்கோ ஒருமூலையில் றேடியோ ஒன்று இரவற் சங்கீதம் பாடியது.

இவற்றை எல்லாம் பார்த்து ரசித்தபடியே நண்பர்கள் ஞானசேகரனும், யேசுதாசனும் மாதா ஆலயத்தினின்று வந்துகொண்டிருந்தனர்.

துன்பத்தின் எல்லையில்தான் மனிதன் இன்பம் காண முடிகின்றது. இன்பமும் துன்பமும் எங்கும் கலந்தேஇருக்கின்றன. மந்தகாச மாலைவேளையின் வனப்பில் மகிழ்ச்சிகொண்ட மக்களுக்குத் தன் உயிருக்காக ஓர் மூலையிற் கிடந்து முனகும் ஈனநாயின் முனகல் எங்கே கேட்கப் போகின்றது? அந்த நாயின்மேல் ஒரு தந்தித்தூண் எப்படியோ விழுந்து விட்டது. நம்மிற் பலர் இந்தநிலையில் ஒரு நாயைக் கண்டால் அதனைக் கல்லாலும், தடியாலும் எறிந்து வருத்துவோம். ஆனால், அதனைக் கண்ணுற்ற தாசன் அவ்வாறு செய்யவில்லை. அந்தநாயின் பார்வையும், முனகலும் "என்னையாரும் காப்பாற்ற மாட்டீர்களா?" என்று கெஞ்சுவதுபோல் இருந்தது அவனுக்கு.

"தாஸ்! அதோ பார்த்தாயா கடலில் ஓர் பிரமாண்டமான கப்பல்" என்று துள்ளினான் சேகர்.

"சேகர்! இதோபார்! இந்தப் பரிதாப காட்சியை" என்று அழாக்குறையில் நாயைச் சுட்டிக்காட்டினான் தாசன்.

திரும்பிப் பார்த்த சேகர் அலட்சியமாக "பூ...இதுதானா? இதைப்போல எத்தனை நாய்கள் ஒருநாளையில் சாகின்றன; வா வா, நாம் கடற்கரைக்குப் போவோம்" என்றான்.

"இல்லை சேகர், இதை நாம் காப்பாற்ற வேண்டும். இதை நாம் காப்பாற்றுவதால் ஆண்டவன் நம்மிடம் அன்பு கொள்வார். அன்றியும் இந்த நாய்கூட நமக்குச் சிலவேளை உதவலாம் என்று சொல்லியபடியே தந்தித்தூணை அசைத்தான். வேண்டாவிருப்புடன் சேகரும் உதவி செய்தான். அத்தூணினின்றும் நாயை விடுவித்து அதற்குத் தீனியும் அளித்தனர் நண்பர். நாய் நன்றியுடன் வாலை ஆட்டிக் கொண்டு தன்வீடு நோக்கி ஓடியது.

நாட்கள் சில கழிந்தன. ஒருநாள் சேகர் தாசனிடம் ஓடிவந்து "தாஸ்! நீ அன்று சொன்னது எவ்வளவு உண்மை என்பதை இப்போதுதான் அறிந்தேன்" என்று படபடப்பும், மகிழ்ச்சியும் கலந்த குரலிற் கூறினான். தாசன் ஒன்றும் புரியாதவனாய்ச் சேகரை என்ன நடந்தது என்று கேட்கும் பாவனையில் நோக்கினான்.

"தெருவில் என்னை ஒருமாடு துரத்திக் கொண்டு வந்தது. நான் மாதாவே என்று அலறிக் கொண்டு ஓடினேன். அகப்பட்டு இருந்தால் உயிரே போயிருக்கும்" என்றதும் மிகுதியைச் சொல்ல இயலாமல் மூச்சுவாங்கினான். தாசன் ஆவலும், அவசரமும் நிறைந்த குரலில் "உன்னைக் காப்பாற்றியது யார்?" என்று வினவினான்.

"நாம் அன்று காப்பாற்றினோமே, அந்த நாய்தான். அது அந்தக் குழு மாட்டை மறித்து என்னைக் காப்பாற்றியது. பார்த்தாயா அதன் பதில் நன்றியை" என்றான் சேகர்.

தாசனின் ஆனந்தம் அளவு மீறியது. துள்ளிக் குதித்தபடி இருவரும் வாசலுக்கு ஓடினர். அந்தநாய் அங்கே நின்று வாலை ஆட்டியது. இருவரும் அதைமாறிமாறிமுத்தமிட்டனர். அன்றியும்,

"உண்மை நண்பன் எங்கள் நாய்
உயிரைக் காத்து உதவிய
செம்மையான செய்நன்றி
செகத்தில் யார்க்கும் இல்லையே"

என்று பாமாலையும் சூட்டினர்.

'கரம்'

## மில்ரேயின் தியாகம்

ஒரு சிற்றூரில் மில்ரேய் எனப் பெயரிய ஒரு சிறுவன் இருந்தான். அவன் புரளிக்காரன். வீட்டில் அவன் இருந்தால் ஒரே குழப்படிதான். வழியில் போகும்போது மரங்களுக்குக் கல்லால் எறிவான். மனிதரைக் கேலிசெய்வான். பாடசாலையில் வகுப்பு மாணவருடன் சண்டை செய்வான். அவர்களின் புத்தகம், பென்சில், கொப்பி இவைகளை ஒளித்துவிட்டு வேடிக்கை பார்ப்பான். சில காலத்தின்பின் அவன் தாய் இறந்து போனாள். அதனால் அவனுக்கு உதவிசெய்வார் இல்லை. படிப்படியாகக் குழப்படி ஒழிந்துபோக மவுனம், ஒடுக்கம், பக்தி ஆதியன ஒன்றின்பின் ஒன்றாக அவனிலே வளர்ந்தன. வளரவே, ஓய்வுநேரத்தில் மற்றச் சிறுவர்கள் கடலை, இனிப்புச் சாப்பிட, பந்து, மாபிள் விளையாட, மில்ரேய் அந்த நேரத்தில்கோயிலுக்குப்போய்ச் செபம் செய்வான். விசேஷமாய்த் தேவமாதா சுரூபத்தின் முன்போய், "தாயேஎனக்குத் தாய்இல்லை; ஆனதினால் நீரே எனக்குத் தாயாய் இரும்; சின்ன யேசுவை வளர்த்து விட்டது போல என்னையும் அன்பாய் வளர்த்துப் பாதுகாரும்" என்று மன்றாடுவான். பிறகு பாடசாலைமணி கேட்டதும் எழுந்து வகுப்புக்குப் போவான். மற்றச் சிறுவர் அவனது நடத்தையைக் கண்டு ஆச்சரியப் பட்டனர். இப்படியாக மில்ரேய் அனுதினமும் கோவிலுக்குப் போய்ச் செபம் செய்து தேவமாதாவுடன் கதைப்பான். தனது துயரையும், சந்தோஷத்தையும் சொல்லிக்காட்டுவான். தனக்காக மாத்திரம் அல்ல, மற்றும் வகுப்பு மாணவர், ஆசிரியருக்காகவும் மன்றாடுவான். சிலகாலத்துக்குப்பின் அவன் ஓர் குருவாகினான். பிள்ளைகளே! நீங்களும் மில்ரேயைப் போல் நடந்து சின்ன யேசுவையும், தேவதாயையும் அதிகமாய் நேசிப்பீர்களாக!

ஆசிரிய மாணவி.

## முட்டை வியாபாரம்

ஓர் ஊரில் ஒருவன் மாதம் தோறும் முட்டைகள் சேர்த்து விற்பது வழக்கம். அந்த மனிதன் வழமைபோல ஓர் நாள் முட்டைகளை எடுத்துக்கொண்டு செல்லும்போது ஒருவன் உதை என்னடா என்று கேட்டான். "நான் சொல்ல மாட்டேன்" என்றான் முட்டைக்காரன். அப்பொழுது இருவரும் கலகப் பட்டனர். முட்டைகள் உடைந்தன. முட்டைக்காரன் வழக்கு வைத்தான். நீதிபதி அவனைப் பார்த்து, உனது முட்டைகள் எத்தனை என்று கேட்டார். அவன் விடையாக, ஐயா எனது முட்டைகள்

| | | | |
|---|---|---|---|
| 2 | ஆற் பிரித்தால் | மிச்சம் | 1 |
| 3 | ,, | ,, | 2 |
| 4 | ,, | ,, | 3 |
| 5 | ,, | ,, | 4 |
| 6 | ,, | ,, | 5 |
| 7 | ,, | மிச்சம் இல்லை. | |

இம்மட்டுந்தான் ஐயா எனது முட்டைகள்என்றான். அவைகள் எத்தனை?

பி. எட்மன்ட்
செம்பியன்பற்று.

## குதிரையும்கழுதையும்

ஒரு மனிதன் ஒரு குதிரையும், ஒரு கழுதையும் வளர்த்து வந்தான், அவன் கழுதையை அயல் ஊருக்குக் கொண்டு போய் உப்பு ஏற்றி வருவது வழக்கம். ஒருநாள் கழுதை தனது நண்பன் குதிரையை நோக்கி என்ன சொன்னது என்றால், "சிநேகிதா, உப்பு ஏற்றிவா நான் கெடுகப் போகின்றேன்; இன்றைக்கு நீ போ" என்றது. அதற்குக் குதிரை "தோழா, எசமான் உப்பு ஏற்றி வரும் பொழுது ஆற்றில் விழுந்து படுத்து விட்டு எழும்பிவா; அப்போது உப்பு கரைந்து விடும்; நீ சுலபமாய் வாலாம்" என்றது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த எசமான் அடுத்தநாள் குதிரையைக் கொண்டு போய்த் தவிடு ஏற்றி வந்தான். குதிரை ஆற்றில் விழுந்து படுத்தது. தவிட்டில் தண்ணீர் பிடித்துப் பாரம்கூடிவிட்டது. குதிரை எழும்ப முடியாமல் அவதிப் பட்டதும் அல்லாமல் அடியும் பட்டது.

பி. எட்மன்ட்
செம்பியன்பற்று.

## "பகர வரிசை நன்னெறி"

படித்தறி.
பாவம் வெறு.
பிறர்க்கிடு.
பீதி நீக்கு.
புண்ணியஞ் செய்.
பூரணம் பெறு.
பெருமை தவிர்.
பேதமை போக்கு.
பைய வினை செய்.
பொறுமை கொள்.
போதனை கேள்.
பௌவ (கடல்) நீராடு.

"ஜெயம்"

## கேட்டது கிடைத்தது

பரிசுத்த பாத்திமாராணியுடைய பேரிரக்கத்தாலும், ஆசா. யோசேவாஸ்முனிவருடைய அற்புதத்தாலும், அர்ச். தெரேசம்மாள், அர்ச். அந்தோனியார், அர்ச். கிறிஞோன்டிமொன்போட்டோ என்பொருடையமன்றாட்டாலும் நெடுங்காலமாய் நான்கேட்டவரம் கிடைத்தது. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

ச. அ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேயானாலும் தாய்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்கள்பலசென்றன. ஓர்ஆண்டு நிறைவாகியது. புஷ்பம் தன்கணவன் விரைவில்வருவாரென அகமகிழ்ந்தாள். அகத்தின்மலர்ச்சி முகத்தில்தோன்றியது. அடிக்கடி முகத்தைக்கழுவுவாள். மாமிகொடுத்த கறுப்புப்புடவையைத் துவைத்துக்கட்டுவாள். தன்கணவனது வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள்.

* * *

ஒருநாள் அந்திப்பொழுது. குரங்கு போன்று சிரங்கும்பிடித்த குரூபிஒருவன் புஷ்பத்தின் மாமியார்வீட்டுக்கு வந்து, "அம்மா, நான்பக்கத்துஊரவன். இருட்டியபடியால் இன்றிரவை இங்கு கழித்து, நாளைக்காலை போகலாமென்று இருக்கிறேன். இன்றிரவு சாப்பாடும், தங்குவதற்கு இடமும் கொடுப்பீர்களாயின் பத்துரூபா தருகிறேன்" என்றுகூறினான். மாமியார் இதைக்கேட்டதும் ஒருநாள்உணவுக்கும், உறைவிடத்துக்கும் பத்துரூபா கொடுக்கிறானே; இவன் பெரியதனவந்தனாய் இருக்கவேண்டும் என்றெண்ணி, உடனே சமையற்கட்டுக்குள்நுழைந்து புஷ்பத்தை நோக்கி, "அடி, ஒருபெரியவர் வந்திருக்கிறார்; அவருக்கு வெந்நீர்போட்டுவை; அவர் ஸ்நானம்செய்தபின் அவருக்குச்சாப்பாடு பரிமாறு" என்று உத்தரவிட்டாள்.

புஷ்பம் மறுபேச்சுப்பேசாது வெந்நீர்அறைக்குள் நுழைந்து அடுப்பில் தீமூட்டினாள். வெளியே விறாந்தையில் உட்கார்ந்திருந்த கிறுதாமீசைவிட்ட அந்தக்குரூர மனிதனைக்கண்டதும் "ஓர் ஆண்டில் திரும்பிவருவதாகக் கூறிப்போனாரே; அவரைக்காணோம்; இப்பொழுது இந்தக்குரங்கன் வந்திருக்கிறான்; இவனுக்குநான் பணிவிடை செய்யவேண்டுமாம்; என்னகொடுமை" என்றுஎண்ணியதும் அவள் கண்களிலிருந்து நீர்பெருகிக் கன்னங்களில் வழிந்தோடியது. இவற்றையெல்லாம் அங்குவந்திருந்த மனிதன்பார்த்து, இன்னும் என்னநடக்கிறது என்று அறிய அவாக்கொண்டான்.

வெந்நீர் தயாராயிற்று. அவனும் ஸ்நானம்செய்துவிட்டுச் சாப்பிட அமர்ந்தான். புஷ்பம் இலைபோட்டு அன்னம்பரிமாறினாள். அவன்திருப்தியாய்ச் சாப்பிட்டுஎழுந்தான். பின்னர் புஷ்பம் தாம்பூலம்கொண்டுபோய் வைத்தாள். அப்பொழுது அவளது கண்களிலிருந்து முத்துப்போல் சில கண்ணீர்த்துளிகள் கீழே விழுந்தன. விம்மல் பொருமலுடன் அழுது கொண்டு அப்புறம் செல்லமுயன்றாள். அதைக்காண மனந்தாங்காதவனாய் வந்திருந்தமனிதன் தன்தலைப்பாகையையும், பொய்மீசையையும கழற்றி வைத்துவிட்டுப் "புஷ்பம்! என்னை ஏறிட்டுப்பார்" என்றுகூறினான்.

தன்கணவனின் சத்தம்போல் இருப்பதைக்கேட்ட புஷ்பம் நீர்மல்கும் கண்களுடன் அவனை ஏறிட்டுப்பார்த்தாள். "ஆ! வந்துவிட்டீர்களா? வேறுயாரோ என்றல்லவோ எண்ணினேன். இவ்விதம்என்னை ஏமாற்றுவானேன்?" என்று சோகங்கனியும் குரலில்கூறினாள். அவன்உடனே அவளை அணைத்து, "கண்ணே, உன்கஷ்டங்களை யான்அறிந்தேன். என்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, மாமிக்கும் மச்சாளுக்கும் கீழ்ப்படிந்து வந்திருக்கிறாய்; அவர்கள்இருவரும் உன்னைப் படுத்தாத பாடுகளெல்லாம் படுத்தியிருக்கிறார்கள்" என்றுகூறி முடிக்குமுன்னமே, புஷ்பம் அங்குவந்திருப்பவனோடு பேசுஞ்சத்தம்கேட்டு, அது என்னவென்று அறியவந்த அவள்மாமி அந்தப்படியேஅசந்துவிட்டாள்.

அவளை இந்நிலையில் கண்டதும் அருமைநாதன், "அம்மா, ஏன்இப்படி நிற்கிறீர்கள்? உங்களிடம் ஒப்படைத்துச்சென்ற என்மனைவியை நீங்களும் அக்காளும் படுத்தாதபாடு படுத்தி அவளை இந்நிலையில் வைத்திருக்கிறீர்கள்; நிலவொளியன்ன அவளது எழில் வதனம்வாடி, உடல்மெலிந்து, இளைத்திருக்கிறாள்; நீங்கள்செய்த கொடுமைகளைப்பற்றி என்நண்பர்கள்பலர் எனக்குஎழுதியிருந்தனர்; ஆனால், உண்மைநிலையை நேரில் அறியவே மாறுவேடம் பூண்டுவந்தேன்; நீங்கள் செய்யும் கொடுமைகளைக்கண்டேன், பணமென்றால் உங்களுக்குப்போதும்; வருவார்போவாருக்கெல்லாம் பணிவிடைசெய்யப் புஷ்பத்தைஏவியிருப்பீர்கள்; அவள் நிறைகுடமாதலால் வீட்டுச்சத்தம் வெளிக்குக்கேளாது உங்கள்இருவருக்கும் அடங்கிநடந்து வந்திருக்கிறாள். இக்கணமே நீங்கள் இருவரும் வெளியேறுங்கள்" என்று அதட்டினான்.

அவன்தாயார் யாதும்கூறஅறியாது கற்சிலைபோல் அசையாது நின்றாள். அவள்கண்களிலிருந்து நீர் ஆறுகப் பெருகியது. அவன்தமக்கையோ சமையலறையைவிட்டு வெளியேவரவில்லை. மாமியாரின் பரிதாபநிலையைக் கண்டதும் புஷ்பம், "நீங்கள் ஏன்இப்படிப் பேசினீர்கள்? சோறுவிழுந்தால் பொறுக்கலாம்; சொல் விழுந்தால் பொறுக்கமுடியுமா? 'பேயானாலும் தாய்; நீரானாலும் மோர்' என்றவாறு அவர்கள் எவ்வளவு பொல்லாதவர்களாய் இருந்தாலும் உங்களைப் பெற்று வளர்த்ததாய்; எனக்கு அன்புள்ள கணவரை அளித்த அருமைமாமியார். நாமே அவர்களை வெருட்டிவிட்டால் ஊரார் என்னசொல்லுவார்கள்" என்று அன்புடன் தன்கணவனை அதட்டினாள்.

மாமியார் இதைக்கேட்டதும் ஓடிச்சென்று, "நீயே என்குலவிளக்கு; உன்னைநான் எத்தனை கஷ்டப்படுத்தியபோதிலும் எனக்காகப் பரிந்துபேசுகிறாய்; உன்பெருந்தன்மையான புத்தி எனக்கும், என்மகளுக்கும் இல்லாமற்போயிற்றே" என்றுகூறி அவளைக்கட்டித்தழுவினாள்.

## ஏக்கருக்கு 43 புசல்

கண்டிப்பிரிவிலே கடந்தபெரும்போககாலத்தில் ஏக்கர்ஒன்றுக்கு 43 புசல் வீதம் நெல் விளைந்திருக்கிறதென்று அதிவிஷயமாய் இலங்கையில் பரிசோதனைநடத்திவருகின்ற டக்றர் ஆர். எஸ். கோஷல்அவர்கள்கூறுகின்றார். அடுத்த பெரும்போக காலத்திலே இதிலும் கூடியவிதமாக நெல்விளைவிக்கக் கண்டிப் பிரிவிலுள்ள சகலஸ்தாபனங்களும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்பதற்கான திட்டம்ஒன்றை மத்தியமாகாணக் கம அதிகாரி சமர்ப்பித்திருக்கின்றார். அடுத்த பெரும்போககாலத்தில் அங்கு 39,196 ஏக்கர்நிலத்திலே நெற்செய்கை நடத்தப்படும். சென்றபெரும்போக காலத்தில் 17,764 ஏக்கர்நிலத்திலே நெற்செய்கை நடைபெற்றது.

## அரிசியைக் குறையுங்கள்

மவனெல்லையிலே சென்ற சனிக்கிழமை கல்விமந்திரியார் எம். டி. பண்டா அவர்கள் பிரதமபாடசாலைஒன்றைத் திறந்துவைத்துப் பேசியபோது: சென்றவருடத்திலே கல்விக்கென அரசாங்கம் 1 கோடியே 40 லட்சம்ரூபா ஒதுக்கியது; ஆனால், அரிசிக்கென்று 3 கோடி ரூபா ஒதுக்கியிருந்தது; அதனால் அரிசி இறக்குமதியைக் குறைத்துப்பிடித்து மிச்சப்படுத்தும் பணத்தைப் பாடசாலைகளுக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும், தெருக்கள் ஆதியவற்றிற்கும் பாவிக்கும்படியாக வாலிபர்களும், வளர்ந்தவர்களும் உணவுப்பொருட்களை அதிகமாக உற்பத்திசெய்யவேண்டுமென எல்லோரையும் தூண்டிவிடலாயினர்.

புத்தக மதிப்புரை

## "கூட்டுறவு அல்லது ஐக்கியவாழ்வு"

ஆசிரியர் :- வழக்கறிஞரும், ஐக்கியதீப ஆசிரியரும், யாழ்ப்பாணக் கூட்டுறவு மாகாணவங்கிக் காரியதரிசியும், வடபகுதி ஐக்கியமேற்பார்வைச்சபைக் காரியதரிசியுமான அ. அருளம்பலம் அவர்கள். அழுத்தகம்: திருமகள் சுன்னாகம். 224 பக்கங்கள்கொண்டது விலை பிரதி ரூபா 3. சுன்னாகம், தனலக்ஷுமி புத்தகசாலையிலும், ஏனையபிரபல புத்தகசாலைகளிலும் விற்பனைக்குக் கிடைக்கும்.

"ஐக்கியமேபலம்," "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு," "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு," "ஒற்றுமை இல்லாக்குடி ஒருமிக்கக்கெடும்" என்பனபோன்ற ஏராளமான பழமொழிகள் ஐக்கியத்தின் முக்கியத்துவத்தைக்குறித்துத் தமிழ்மொழியில் வழங்கிவருகின்றனஎனினும் இந்தஇருபதாம் நூற்றாண்டிலே (இதன்) கூட்டுறவின் உண்மை அதிகமாகஉணரப்பட்டு அது எல்லாத்துறைகளிலும் கையாளப்படுகின்றது. உலகடங்கலும் எந்தச்சிறிய விஷயமாயிருப்பினும் கூட்டுறவு முறையிலேயே காரியங்களை நடத்திவரத் தொடங்கியிருக்கின்றனர். கைத்தொழில், கமத்தொழில், வியாபாரம், ஸ்தாபனங்கள், சிறுதொழில்கள் யாவும் கூட்டுறவுமுறையில்செய்வது இலகுவும், நன்மையும்தருவது நாம் அநுபவத்திற்கண்ட உண்மை. இலங்கை அரசாங்கமும் இதை உணர்ந்து இதைப்பெரிதும் ஊக்குவித்து வருவது மாத்திரமல்ல, ஒருமந்திரியின் முக்கிய பொறுப்பாகவைத்து நிர்வகித்தும்வருகின்றது. கூட்டுறவு இயக்கங்கள் இலங்கையில், விசேடமாக யாழ்ப்பாணப்பகுதியில் அதிகமாகவும், திறமையாகவும் நடைபெற்று வருகின்றன.

கூட்டுறவு இயக்கத்தைப்பற்றித் தமிழில் சிறு சிறு துண்டுப்பிரசுரங்கள் வாயிலாகச் சுருக்கமாக அறியக்கூடுமாயினும் அதைப்பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் அறியக்கூடியதாகத் தமிழில் ஒரு நூலாயினும் இல்லாதிருந்தமை பெருங்குறையாக இருந்துவந்தது. இக்குறையைத் திரு. அ. அருளம்பலம் அவர்கள் எழுதிய "கூட்டுறவு அல்லது ஐக்கியவாழ்வு" என்ற அரிய புத்தகம் நீக்கிவிட்டது. திரு. அ. அருளம்பலம் அவர்கள் ஒரு சட்டநிபுணர். கூட்டுறவுபற்றிய ஒரு பத்திரிகையின் ஆசிரியர். கூட்டுறவுவங்கி, சபைகளின் காரியதரிசியாக அநேகவருடங்களாக இருந்துவருகின்றார். அவர் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றியே நினைத்து, உழைத்து, கனவுங்கண்டு அதிலே ஊறிப்போய் இருப்பவர். கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிய நிரம்பியஅறிவும், மிகுந்தஅநுபவமும் உடையவர். அவர் எழுதிய இந்நூல் பொருட்செறிவுடையதாய், யாவரும்வாசித்து விளங்கக்கூடிய இனியசெஞ்சொற்களில், இலகுவானநடையில் எழுதப்பட்டிருக்கின்றது. முடவனும் குருடனும் என்ற கதையில் தொடங்கி வாசிப்பவர்க்குக் கவர்ச்சியையும், ஆர்வத்தையும் கொடுத்துக் கடைசிப்பக்கம்வரையும் விடாதுவாசிக்கத்தக்க தன்மையாக எழுதப்பட்டிருக்கிறது. கூட்டுறவு, அதன் ஆரம்பமும் வளர்ச்சியும், சங்க அமைப்பு, சட்டதிட்டங்கள், புள்ளிவிபரங்கள் ஆதியனவுமுடையதாய் அழகானபடங்களுடன் வெளியிடப்பட்டிருக்கின்றது. உயர்ந்தகடதாசியில், நல்லஎழுத்தில் எழுத்துப்பிழைகளின்றிப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருப்பவர்கள், கூட்டுறவு உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர், மாணவர், கூட்டுறவில் ஆர்வமுள்ளவர்கள் ஒவ்வொருவர் கையிலும் அவசியம் இருக்கவேண்டிய ஒரு புத்தகம் இதுவாகும். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.


நமது அச்சியந்திரசாலைப் புத்தகசாலையில்

## விற்பனைக்கிருக்கும் இந்திய கத்தோலிக்க புத்தகங்கள்

| | |
|---|---|
| ஞானோபதேசக் கோர்வை: முதற் பாகம், இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம் | ... 9-75 |
| சத்தியவேதாகம சங்க்ஷேபம் (பழைய ஏற்பாடு & புதிய ஏற்பாடு) | ... 1-10 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் | ... 2-25 |
| கத்தோலிக்கு களஞ்சியம் | ... 1-50 |
| மன்ரேசா | ... 3-25 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் | ... 1-10 |
| தொன் பொஸ்கோ சரித்திரம் | ... 75 |
| அர்ச்சியசிஷ்டவாரம் | ... 80 |
| சேசு திருச்சரிதை | ... 1-10 |
| சேசுவின்சிறிய புஷ்பம் | ... 1-10 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் | ... 1-10 |
| ஞான சீவியம் | ... 2-50 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா | ... 1-00 |
| அன்னையும் தந்தையும் | ... 40 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவிநவநாள் | ... 35 |
| திரு இருதய நண்பர்களுக்குத் திருமணி | ... 40 |
| ஜெபமாலை நவநாள் | ... 25 |
| புதுமைவள்ளல் புனித அந்தோனியார் | ... 45 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன் | ... 25 |
| அர்ச். சூசையப்பரிடம் போங்கள் | ... 30 |
| அர்ச். சூசையப்பர் | ... 55 |
| ஆயரின் குரலொலி | ... 3-75 |
| புதிய ஏற்பாடு | ... 8-50 |

விலாசம்:

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## மரணசங்கதி

வல்வெட்டித்துறையிலே செல்வஞ் செல்வாக்குடையவராய், அங்குள்ள அர்ச். செபஸ்தியார்கோவில் மூப்பராய், குருமாராலும், பெரியோராலும் நன்கு மதிக்கப்பெற்றவராய், பல தோணிகளின் சொந்தக்காரனாயிருந்து காலஞ்சென்ற திரு. இன்னாசிமுத்து சீமாம்பிள்ளை அவர்களின் மனைவியாரான ரோசம்மாஎன்பவ விருத்தாப்பிய நோய்கண்டு அந்தியதேவதிரவியானுமானங்களைப் பெற்றுச் சென்ற 24-7-52 வியாழக்கிழமை தமதுபுதல்வர் திரு. எஸ். ஏ. ஆரோக்கியநாதர் அவர்கள்மனையில் மரணநித்திரையானா. மரிக்கும்போது இவவுக்குவயது 80. இத்துயரசெய்தியைக் கோவில்மணி ஓசைமூலம் உற்றார்உறவினர் அறியவந்து அங்குசென்று தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தார்கள். இவவுக்குத் தண்டையல் எஸ். அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற றெயில்வே ஸ்ரேஷன்மாஸ்றர் எஸ். ஆரோக்கியநாதர், பண்டத்தரிப்புக் கிராமச்சங்க அங்கத்தவருள்ஒருவரான திரு. எஸ். ஞானப்பிரகாசம், தற்போது மன்னாரில் ஓவசியராயிருக்கும் திரு. எஸ். கிறிஸ்தோப்பர் என்பவர்கள் புத்திரராவர். காலஞ்சென்ற ஏ. ஞானப்பிரகாசம் அவர்களின் மனைவியாரான மரியமுத்து ஏகபுதல்வியாவர். 26-ந் திகதி காலை 9 மணிக்கு இவவின்பிரேதமானது அழகியபேழையில்வைத்துப் பெருந்திரளான இனசனர் சிநேகிதர் கூடியசமுகத்திலே உதவிக்கட்டளைக்குரவர் வண. பி. அல்பிறெட் சுவாமியவர்களும், கொழும்புத்துறைத் தாபனத்தலைவர் வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியவர்களும் துக்ககீதம் பாடிக் கடைசிஆசீர்வாதங்கூறிநிற்கப் புதியகல்லறையிற் பூமதானமாயிற்று.

R. I. P. — நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார விழா
### பண்டத்தரிப்புக்கிராமப்பற்று

ஆண்டுதோறும் அயற் கிராமங்களில் நடைபெற்றுவந்த சுகாதார விழாவை இவ்வருடம் எமதுசில்லையம்பதி கண்டு களிக்கும் அதிர்ஷ்டச்சீட்டைப் பெற்றது. அதற்கோர் ஆரம்பமாக 24-7-52 வியாழனன்று சுகாதாரபரிசோதகர் தலைமையில் சுகாதாரசுலோகங்களின் ஆர்ப்பரிப்போடு சுகாதாரபவனி நடைபெற்றது. மறுநாள் 25-ந் திகதியன்று எமது ஆலயமுன்றிலில் சாயந்தரம் 6 மணியளவில் பலபிரமுகர்கள், பண்டிதர்பாமரர், வாலர்பாலர் பெருந்திரளாகச் சமுகமளித்திருக்க, ஆலயமணிகள் ஆர்ப்பரிக்க, தமிழ்ப்பாஷையைச்சிறப்பாகக்கற்றுச் சொற்பஞ்சமற்ற வண. எல்.டெசி சுவாமி அவர்கள் விழாவைத் திறந்துவைத்து தமிழ்மொழியில் அரியதோர் அறிவுரைநிகழ்த்தினர். பின்னர் சில்லையூர் முன்னேற்றசங்க தலைவரான ஆசிரியர் திரு. யேம்ஸ் அவர்கள், டக்றர்குருசாமி, சுகாதாரபரிசோதகர், ஆசிரியர் அடைக்கலமுத்து ஆகியோர் மக்களின் ஆரோக்கிய வாழ்வு சம்பந்தமாகத் தமிழில் பலவிரிவுரைகள் நிகழ்த்தினர்.

அதன்மேல் பண்டத்தரிப்புக் கிராமப்பற்றைச்சேர்ந்த பாடசாலைகட்கிடையே சுகாதார சம்பந்தமான பேச்சு, பாட்டு, நடனம், நாடகம் ஆகியதுறைகளில் போட்டிகள் நடைபெற்றன. அவைகள் முப்முரமாக நடைபெற்றமையாலே சகல அம்சங்களும் அனைவரையும், மத்தியஸ்தலரத்தாரும் பிரமிக்கச்செய்தன. நிரையிடப்பட்ட விஷயங்களில் இளவாலை சென் ஹென்றீஸ் ஆண்பாடசாலை நாடகத்துக்கு முதற்பரிசாக வெள்ளிக்கிண்ணம் சன்மானிக்கப்பெற்றது. இளவாலை, சில்லாலைப் பெண்பாடசாலைகள் நடனத்தில் முதலிடம்பெற்றுப் பரிசிற்கிண்ணங்களைத் தாங்கிநின்றன. பேச்சுப்போட்டியிலும் சில்லையூர்ப் பெண்பாடசாலை முதலிடம்பெற்று அங்கண்குழுமியிருந்தாரின் புகழ்ப்பரிசுடன் பரிசிற்கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டது. பண்டத்தரிப்புக் கத்தோலிக்க கலவன் பாடசாலை பாட்டிலும், இளவாலைக் கத்தோலிக்க ஆண்பாடசாலை நாடகத்திலும் முதலிடம்வகித்து வெள்ளிக்கிண்ணங்களைப் பரிசில்களாகப்பெற்றன. ஈற்றில் வண. கட்டளைக்குரவரின் அன்புததும்பிய நன்றியுரையுடன் கூட்டம்கலைந்தது.

அடுத்தநாள் சில்லையூர்ப் பெண்பாடசாலையானது வலிகாமம்மேற்குப் பாடசாலைகளின் சுகாதாரப்போட்டியிற் கலந்து, அங்கும் தான் எடுத்துக்கொண்ட இருவிஷயங்களிலும் முதலிடம்வகித்து வெள்ளிக்கிண்ணங்களைப் பெற்றதோடு, நடனத்தில் மூன்று வருடங்களாகப் போட்டியிட்டு முதலிடம் வகித்தமையின் விளைவாகப் பலத்த கரகோஷங்களிடையே முன்னர் தான் பெற்ற பரிசிற்கிண்ணத்தைத் தனக்கே ஈட்டிப்புகழ்மாலை சூட்டியது. இதற்கெல்லாம் அயராதுழைத்த பண்டத்தரிப்புக் கிராமச்சங்க தலைவருக்கும் சுகாதார பரிசோதகருக்கும், பக்கபலமாய்நின்றுதவிய அனைவோருக்கும் எம்நன்றியுரித்தாகுக.

சில்லையூர் வாசி.

## புதிய பாடத்திட்டக்
## கணிதங்கள்

திரு. வே. சிவக்கொழுந்து அவர்களால் இயற்றப்பெற்ற மேற்படி கணிதநூல்கள் 2-ம் வகுப்புமுதல் 7-ம் வகுப்பு ஈறாக உள்ளவையும், உயர் வகுப்புகட்குரிய பாடகணிதமும் வித்தியாபிரசுரசபையாரால் அங்கீகரிக்கப்பெற்றுள்ளன. பிரபல புஸ்தகசாலைகளில் பார்வையிடலாகும். தேவைகட்கெழுதுக.

பிரசுரம்:
வடலங்கா புஸ்தகசாலை
பருத்தித்துறை
**Point Pedro**

## திவ்விய நற்கருணை விழா
### அடம்பன்

அடம்பன் விசாரணைப்பங்கில் மட்டுமல்ல, ஆனால், மாதோட்டப்பகுதியில் தானும் இதுகாலவரை நடந்திராதவிதமான திவ்வியநற்கருணைவிழா ஒன்று, அடம்பன் கட்டளைக்குரவர் வண. எஸ். வேந்தர்கோன் சுவாமிகளின் அயரா முயற்சியாலும், அவ்விசாரணைப்பங்குக் கத்தோலிக்ககலாசாலைகளின் ஆசிரியர், மாணவர், மற்றும்கிறீஸ்தவமக்களின் ஒத்துழைப்பாலும் சென்ற 27-ந் திகதி அதிகம் பக்திப்பரிமளிப்பாய் நடைபெறலாயிற்று. மன்னார்ப்பட்டினம், வங்காலை, விடத்தற்தீவுவாசிகளும், பலகுருப்பிரசாதிகளும் சமுகந்தந்து அதனைச்சிறப்பித்தார்கள். விழாவிற்குமுந்திய இருதினங்களிலும் மாணவர்களுக்கு ஓர் ஞான ஒடுக்கம் சீரியமுறையில் போதிக்கப்பட்டது. அதிலும், திருமணித்தியால ஆராதனையிலும், மற்றுஞ்சில சந்தர்ப்பங்களிலும் இன்பரசப் பிரசங்கியார் அதிவண. எஸ். பீற்றர்சுவாமியவர்கள் ஒலிபரப்பி மூலம் அரியபிரசங்கங்கள் செய்தனர். 27-ந் திகதிகாலை வண. கட்டளைக்குரவரைத் தலைமையாகக்கொண்டு பெருந்திரளான மக்கள்சென்று எமதுமேற்றிராணி ஆண்டவரை வரவேற்று அழைத்துவந்து ஆலயத்தைஅடைந்ததும் திவ்வியபூசைநிறைவேறியது. பின்னர் வளர்ந்தோரும், பிள்ளைகளுமாகச் சுமார் 300 பேர் ஆண்டவர் அவர்களால் உறுதிப்பூசுதல் செய்யப்பெற்றார்கள். அதன்மேல்அவருக்கு ஆசிரியர், மாணவர்களாலும், பொதுக்கிறீஸ்தவமக்களாலும் வரவேற்புஉபசாரம் ஒன்று அளிக்கப்படலாயிற்று. அத்தருணம் மாணவர்கள்சார்பாக ஓர்மாணவியாலும், கிறீஸ்தவர்களின் சார்பாகத் திரு. கி. சவிரிபிகிறுடோ அவர்களாலும் இருவந்தனோபசாரப்பத்திரங்கள் படித்துவழங்கப்பட்டன. அதன்மேல் வண. கட்டளைக்குரவராலும், ஆசிரியர் வி.ஆர். டோமினிக் அவர்களாலும் பாராட்டுரைகள் கூறப்பட்டபின் ஆண்டவர் அவர்கள் பதிலளித்து ஆசீர்வதித்தனர்.

பிற்பகல் 4 மணியளவில் திருமணித்தியாலஆராதனை முடிந்ததும் ஆயிரக்கணக்கான சிறார்களும், பெண்மணிகளும், ஆடவர்களும் சமயபேதமின்றி வரிசையாகமுன்செல்ல, பாடகர்குழு திவ்வியகானம் பாடிச்செல்ல, சிறுமிகள் நறுமலர்தூவி அஞ்சலிசெய்துவர, குரவர்கள்பலர் புடைசூழ்ந்துவர, இராசகுரவர் கதிர்ப்பாத்திரத்தைக் கரத்தேந்தி அலங்கரிக்கப்பெற்ற வீதிவழியே பவனிசென்றகாட்சியோ பகருந்தரமன்று. நாற்சந்தியில் அமைக்கப்பட்டிருந்த அழகியபந்தலிலே ஆசீர்வாதம் அருளப்பட்டபின், நெடுங்கண்டல்சிற்றாலயமுன்றிலிலே மேஸ்திரியார் மாணிக்கத்தம்பி அவர்களால் அமைக்கப்பட்டுச் சுவர்க்கதலம்போல்சோபிதமுற்றுவிளங்கியபந்தலிலே கடைசி ஆசீர்வாதம் அருளப்பெற்றதும், நெடுங்கண்டல்கிறீஸ்தவமக்களால் ஆண்டவர் அவர்களுக்கு ஓர் சோபனபத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பின்னர் ஆண்டவர் அவர்களின் திருக்கர ஆசியுடனும், கட்டளைக்குரவரின் நன்றியுரையுடனும் விழா முடிவெய்தியது.

(காட்டுத்தூதன்)

### வாழ்க்கைச் செலவுப்புள்ளி

இலங்கையிலே சென்றஆடிமாதத்தில் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை முந்திய ஆனியிலும் இரண்டு புள்ளிகளால் குறைந்து 277 ஆகியிருக்கின்றது. அவ்வண்ணம் இரண்டுபுள்ளிகள் குறையக்காரணம், புடவைகள், மாக்கறிவகை, விறகு, எலுமிச்சம்பழம் ஆகியவற்றின் விலைகள் குறைந்தமையேயாம். மறுபக்கத்தில் வெற்றிலை, பாக்கு ஆகியவற்றின்விலைகள் ஏறியிருக்கின்றனவாம்.

Mal. No. 3. Eng.

## ரோமை காப்பாற்றப்பட்டது

பலநூற்றாண்டுகளாகத் தென் ஐரோப்பிய நாகரீகத்தின் மத்தியதானமாகவிளங்கியிருந்த ரோமைநகரம் அநேகம்தடவைகளிலே கொள்ளைநோய்களால் பாழாக்கப்பட்டிருக்கின்றது. 15-ம் 16-ம் 17-ம் நூற்றாண்டுகளிலே பிளேக், மலேரியா, இன்புளுவென்சா ஆதியன ரோமைநகரில் கொடிதாகப்பரந்து, பின்னர் அவற்றைத்தொடர்ந்து பஞ்சந்தலைகாட்டியது.

இக்னேஸ் டி லோயலா, கமிலியஸ் டி லெல்லிஸ், யோசெவ் டி கலசன்சா என்பவர்களும், எதிர்ச்சீர்திருத்த தலைவர்களும், அவர்களைப்பின்பற்றியவர்களும் இந்தக்கொள்ளைநோய்களால் ஏற்படும்அழிவுகளைத் தடுத்துக்கட்டுப்படுத்துவதிலே அதிகமான சேவை ஆற்றியிருக்கின்றார்கள்.

அத்துணைசோகத்துடன் பாராட்டப்பட்ட பொந்தினேசதுப்புநிலங்களிலிருந்து உற்பத்தியான மலேரியா ரோமைநகரில் என்றைக்குமே மிகப் பயங்கரமானநோயாய் இருந்தது. இக்காலத்திலே தண்ணீரும், சதுப்புநிலங்களும், மூடுபனிகளும், பரமாணு மண்டலத்தின்நிலைமையும், சுகாத்திய மாற்றங்களுமே மலேரியாவுக்குக்காரணங்களென்று கருதப்படுகின்றது. மலேரியா என்றபெயர் ''மல்'எரியா'' (கெட்டவாயு) எனும்சொற்களிலிருந்து உண்டாகின்றது.

சிங்கோனமரப்பட்டை ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகப்பட்டநன்மையாலே ரோமைநகரைச்சூழவரவிருக்கின்ற சுகாதாரமற்றதும், பண்படாததுமான பரந்தவெளியானது எஞ்சாததும், தவிர்க்க முடியாததுமான அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது. பயங்கரத்துக்குரியவிதமாக மலேரியா தலைகாட்டிக்கொண்டிருந்த அந்தச்சந்தர்ப்பத்திலே சிங்கோனப்பஸ்பத்தின் பயன்கள் கண்டறியப்படாதிருக்குமானல் ரோமைநகரின்சூழல்கள் சகாராவைக்காட்டிலும் இன்னும்அதிகபயங்கரமும், அபாயகரமுமான ஓர்வனாந்தரமாகச் சந்தேகமின்றியே மாறியிருக்கும். ரோமைநகரைச் சூழவரவுள்ள பரந்தவெளியின் மிகப்பெரும்பகுதி பண்படுத்தப்பட்டுச் செழிப்புற்று விளங்குகின்றது. புராதனநாகரீகங்களின் ஸ்தானத்திலே விருத்திபெற்றோங்கும், தொழிற்சாலைகளும், புதுப்புதுமுயற்சிகளும் இப்போது தோன்றியுள்ளன.

இந்தமாற்றத்தில்அதிகம் சிங்கோனப்பட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்தாகிய குயினைல் செய்துமுடிக்கக்கூடியதாயிற்று.

மலேரியாக்காலம் முழுவதும் மலேரியாவராமல் தடுப்பதற்காகத் தினமும் 6 கிறேய்ன் குயினைனும், மலேரியா கண்டபின் அதற்கோர்சிகிச்சையாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைனும் பாவித்துவரவேண்டுமென முந்திய சர்வதேசசங்கத்தின் மலேரியாக்கம்மிஷன் சிபாரிசுசெய்திருக்கின்றது. சிகிச்சைமுடிந்தபின் குயினைன் பாவிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். திரும்பவும் மலேரியா தலைகாட்டுமானல் அதேவிதமாகச் சிகிச்சை செய்யவேண்டும்.

## Musali North Village Committee
### முசலிவடக்குக் கிராமச்சங்கம்
## Notice Calling for Tenders
## கிராம வேலை விளம்பரம்

அரிப்புத்துறையில் புதிதாய் வீடுகள் கட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

1. மேற்படி வேலையைக் குத்தகையாக எடுத்துச்செய்ய விரும்புவோர் 1952-ம்ஆண்டு ஆவணிமாதம் 18-ந் திகதி பகல் 12 மணிக்குமுன் கிராமச்சங்கத் தலைவருக்கு மனுப்பண்ணல்வேண்டும்.

2. மனுப்பண்ண விரும்புவோர் 1952-ம் ஆண்டு ஆவணிமாதம் 14-ந் திகதிக்குமுன் மேற்படி சங்கக்கந்தோரில் ஒவ்வொரு விகிதடாப்புப் பத்திரத்திற்கும் ரூபா பத்துக் கட்டிப்பெற்றுக்கொள்ள வேண்டும். சங்கத்தாற் கொடுக்கப்படும் விகித டாப்புப்பத்திரங்களிலேயே மனுச் செய்தல்வேண்டும்.

3. ஒப்பந்தம்எழுதியபின்னரே விகித டாப்புப்பத்திரப்பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

4. விகித டாப்புப்பத்திரங்கள் தெளிவாக மையினல் நிரப்பப்படல் வேண்டும். அழித்தல்கள் திருத்தங்கள் உள்ளஇடங்களில் விண்ணப்பக்காரனின் கைச்சாத்திடப்படல்வேண்டும்.

5. விகிதடாப்புப்பத்திரம் கடதாசிக் கூட்டில்போட்டு, கிராமச்சங்கத் தலைவர், முசலிவடக்குக் கிராமச்சங்கம், சிலாவத்துறை என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். கடதாசிக்கூட்டில் இடதுபக்க மேல்மூலையில் மேற்படிவேலையின் பெயரைக் குறிப்பிடல்வேண்டும்.

6. மேற்படி வேலையைப்பற்றிய விபரங்களைக் கிராமச்சங்கக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

7. குத்தகைகாரனாய் நியமிக்கப்படுபவர் குறித்தவேலையைச் சரியாகவும், ஒழுங்காகவும் செய்வதற்குப்பிணையாய்க் கேள்வித்தொகையில் பத்திலொருபங்குப்பணம் கட்டியபின்னரே ஒப்பந்தம் எழுதப்படும். கிராமச்சங்கத்தலைவரால் குறிக்கப்பட்டதிகதிக்குள் ஒப்பந்தம் செய்யத்தவறின் குத்தகை மறுபேருக்குக் கொடுக்கப்படுவதோடு பிணைப்பணத்தில் ஒருபகுதி அல்லது முழுவதும் விகிதடாப்புப்பத்திரப்பணமும் பறிமுதலாக்கப்படும். அத்துடன் குற்றப்பட்ட குத்தகைகாரரின்இடாப்பில் அவர்பெயர் பதியப்படும்.

8. விகிதடாப்புப் பத்திரம்பெற்றோர் மனுப்பண்ணுதொழியின் விகிதடாப்புப் பத்திரப்பணம் பறிமுதலாக்கப்படும்.

9. குத்தகையில் குறைந்தகேள்வியை அல்லது எந்தக்கேள்வியையும் ஏற்றுக்கொள்ளக் கிராமச்சங்கம் கடமைப்படுத்திக்கொள்ளமாட்டாது.

10. அரசாங்கத்திற்கு அல்லது ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒப்பந்தமாய் வேலைசெய்து பிழைப்பட்டவர்களின் மனுப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. விகிதடாப்புப்பத்திரம் கிராமச்சங்கத்தலைவருக்கு அனுப்பும் அதேதினத்தில் அதுபோன்ற மனுப்பத்திரமொன்று வடபிரதேசம் உதவி ஸ்தல-ஸ்தாபன அதிபர் அவர்கட்கு வவுனியாஎன விலாசமிட்டனுப்புதல்வேண்டும்.

நா. மு. முத்தலிபு
முசலிவடக்குக்
கிராமச்சங்கத் தலைவர்

முசலிவடக்குக்
கிராமச்சங்க கந்தோர்,
சிலாவத்துறை.
28-7-1952

—பசிபிக்சமுத்திரநாடுகளை ருஷியா ஆக்கிரமிக்கும்பட்சத்தில் அமெரிக்க ஐக்கியதேசத்தையோ, யப்பானையோ, அன்றேல் பிலிப்பைன்சையோ பாதுகாப்பதற்குதவியாக ஆஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் பத்துலட்சம் யுத்தவீரர்களை உதவுதற்குத் தயாராயிருப்பதாக அமெரிக்கவாசினிடமாய் இருந்துவருகின்ற ஆஸ்திரேலிய ஸ்தானிகரான திரு. பேர்சி ஸ்பெண்டர் அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை சான்பிரான்சிஸ்கோநகரில் தெரிவித்திருக்கின்றார்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 7-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org